
சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான
பணியகம்

# வானவில்
# VAANAVIL

மலர்–01 ஆடி–மார்கழி 2013




நல்லிணக்கத்தின் பாதையில் சமாதானத்தை நோக்கி......

"வானவில்" சஞ்சிகை ஆடி-மார்கழி 2013, மலர்:01 இதழ்:01

**ஆசிரியர்:**
அருட்தந்தை
யோ. யு. கமலானந்தன் அ.ம.தி

**இணை ஆசிரியர்:**
திருமதி சி. சோபனா

**ஒருங்கிணைப்பாளர்கள்:**
திருமதி சுயாதா
திரு. அனுசாந்தன்
திருமதி நிறஞ்சினி
திரு. சுதாகர்
திரு. சுதாகரன்
செல்வி சர்மலா

**நிர்வாகக் குழு:**
CPR நிர்வாகம்

**ஆலோசனைக்குழு:**
திரு. சர்வேஸ்வரா
திரு. யோசப்பாலா
திரு. சச்சிதானந்தன்
திருமதி சிரோமி லெனாட்
Dr. பராசக்தி

**வெளியீடு:**
சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்
இல. 08. குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி,தொலைநகல்
021 222 8131

மின்அஞ்சல்:
cprjaffna@gmail.com
jaffnacpr@gmail.com

இணையத்தளம்
www.peacecentrejaffna.org

## பொருளடக்கம்

இயக்குனர் இதயத்திலிருந்து
சமாதானம்
நிறுவனம் பற்றிய ஒரு பார்வை
சமாதானத்தின் முக்கியத்துவம்
மகிழ்ச்சிக்கான வாசல் கதவுகள்
கவிதைக்களம்
திறன்களே உலகின் திறவுகோல்கள்
முரண்பாட்டை முகாமை செய்தல்
சமாதானத்தின் சாயலாக...
சமாதானம் உளவியல் பார்வை
சமாதானத்திற்கான கல்வி
உள்ளக முரண்பாடுகளும் இளைஞர்களும்...
சமாதானம் சாத்தியமாகுமா?
மன அடக்கமே மகிழ்வான வாழ்வின்...
நெல்சன் மண்டேலா
வங்காரி மாத்தாய்

**Publication:**

Centre for Peace and Reconciliation
No 08, Grousseault Road,
Jaffna.

Tel/Fax: 021 222 8131
E-mail: cprjaffna@gmail.com
jaffnacpr@gmail.com
Web sight:
www.peacecentrejaffna.org

# இயக்குனர் இதயத்திலிருந்து...

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகமானது கடந்த 9 வருடங்களாக தன்னுடைய பணியினை யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஆற்றிவருகின்றது. இப்பணியகத்தினுடைய நோக்கமானது நல்லிணக்கப் பாதையில் சமாதானத்தை உருவாக்குவதாகும். எனவே இப்பணியகமானது இன மத மொழி வேறுபாடின்றி பிறமத இன சகோதரர்களோடும் இணைந்து பணியாற்றி வருகின்றது. மேலும் சமாதான நல்லிணக்க கருத்துக்களை மக்களுக்கு தெரிவிக்கும் நோக்கோடு பணியகத்தின் களநிகழ்வுகளின் தொகுப்பு உள்ளடங்கலாக ஒரு சிறிய கையேடு வானவில், தேடல்கள், தூதர்கள் என்ற பெயரில் வெளியிடப்பட்டு வந்தது. பணியக பணியாளர்களுடைய கூட்டு முயற்சியில் இக்கையேடுகளானது இவ் வருடத்திலிருந்து வானவில் என்ற பெயரில் ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை வெளியிடப்படும் ஒரு சஞ்சிகையாக வெளிவருகின்றது.

இதனுடைய நோக்கம் என்னவென்றால் வன்முறையற்ற ஒரு சமாதான சமூகத்தை உருவாக்குவதாகும். வன்முறையற்ற என்பது உடல்சார், உளசார் , சமூக அல்லது சுற்றாடல் பாதிப்பை அல்லது மக்கள் தமது முழுமையான ஆற்றலை அடைவதனைத் தடுக்கின்ற செயல்கள், சொற்கள், மனப்பான்மைகள் கூட்டமைப்புக்கள் என்பவைகளை உள்ளடக்குகின்றது. எனவே வன்முறையோடு சம்பந்தப்பட்டவர்களில் நேர் மறையான நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தி எதிர்கால வன்முறையை மட்டுப்படுத்துவதும், விரோத குழுக்களிடையே புதிய மற்றும் நிலைத்து நிற்கின்ற உறவுகளை ஏற்படுத்துவதும், முரண்பாட்டிற்கான காரணங்களுக்குத் தீர்வை ஏற்படுத்தி கடந்த கால துயரங்களை நிவர்த்தி செய்து நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்பதற்கான நீதியை அடைவதற்கான திட்டங்களை மனித மனங்களில் ஏற்படுத்துவதுமாகும். எனவே இச் சஞ்சிகையை மக்கள், மாணவர்கள், இளைஞர்கள் வாசிப்பதன் வழி தங்கள் சிந்தனைகள், உணர்வுகள், வார்த்தைகள், நடத்தைகளில் ஒருமாற்றங்கண்டு நல்ல சமூகத்தை உருவாக்குகின்றவர்களாகவும், ஆரோக்கியமான வாழ்வை நாடுகின்றவர்களாகவும் இருக்கவேண்டும்.



Nallur Swami Gnanapragasar Library
"Thedarpaham"
657/1, Hospital Road, Jaffna.

எனவே ஒரு ஆரோக்கியமான நல்ல சமூகம் உருவாக ஒருவன் தன்னை மாற்றவேண்டும். அடுத்தவன் மாறவேண்டும் என்று விரும்புவதைவிட தான் மாறவேண்டும் என்று விரும்பவேண்டும். கைக்கடிகாரம் சரியான நேரத்தைக் காட்டவில்லையென்றால் அதனைப் பழுதுபார்த்து செம்மைப்படுத்துவதை விட்டுவிட்டு சூரியனின் போக்கை கடிகாரம் காட்டும் நேரத்திற்கு மாற்றியமைக்க முடியாது. எனவே சமாதானம் நல்லிணக்கம் என்பது ஒருவன் தன்னை மாற்றிக்கொண்டு தன்னுள்ளும், தன்னோடு வாழுகின்ற உறவுகளிலும், தான் வாழுகின்ற சுற்றாடலிலும் முதலில் உணரப்படவேண்டிய ஒன்றாக இருக்கின்றது. எனவே நாம் ஒவ்வொருவரும் எங்களை மாற்றிக்கொண்டு சமாதான கருவிகளாக சமூகத்தில் நடமாட இச்சஞ்சிகை உதவும் என நம்புகின்றோம்.

இயக்குனர்
**யோ. யு. கமலானந்தன் அ.ம.தி**
சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்.

# சமாதானம்

எல்லா பிரஜைகளுக்கும் சமமான நியாயத்தை வழங்கக்கூடிய ஜனநாயக சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் மதிப்பிற்குரிய அங்கத்தவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார்கள் என்ற மனவுணர்வுடனும் மனிதாபிமானத்திற்கான கௌரவத்துடன் வாழ வழிசமைப்பதுவே சர்வதேச சமாதான தினத்தின் குறிக்கோளாக அமைதல் வேண்டும். இதன் மூலமே உலகில் நிரந்தர சமாதானமும் சுபீட்சமும் மலர வாய்ப்புண்டு. எங்கும் சாந்தியும் சமாதானமும் நிலவ ஆத்ம சக்தி ஓங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

சி.ஸ்ரீசக்திவேல்
தவிசாளர், யாழ் மத்தியஸ்த சபை
தலைவர், அறவழி தொண்டு நிறுவனம்.

# சமாதானம்

கடந்த கால உலக வரலாற்றை அலசி ஆராய்ந்து பார்ப்போமானால் நாட்டுக்கு நாடு ஏற்பட்ட யுத்தங்களும் அவைகளால் ஏற்பட்ட அழிவுகளும் உயிரிழப்புக்களும் எத்தகையவை என்று விளங்கிக் கொள்ளமுடியும். பண்டைக் காலப் பேரரசுகளிடையே நடைபெற்ற போர்கள், அவற்றைத் தொடர்ந்து வல்லரசுகளிடையே நடைபெற்ற முதலாம் இரண்டாம் உலகயுத்தங்கள் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்கள், அழிவுகள் இலட்சக்கணக்கானவை என உலக வரலாறு கூறுகின்றது. இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் அமெரிக்க அரசு யப்பான் நாட்டிற்கு வீசிய அணுக்குண்டினால் பல இலட்சக்கணக்கான மக்கள் ஒரு சில நிமிட நேரத்துக்குள் இறந்தொழிந்தது மட்டுமன்றி அதன் தாக்கம் அந்நாட்டின் இன்றைய சமுதாய மக்களிடையேயும் காணப்படுகின்றது. இப்போதும் ஷிரோசிமா நாகசாகி நாட்டு மக்களிடையேயும் அத்தாக்கம் காணப்படுகின்றது. இப்போதும் ஷிரோஷிமா நாகசாகி மக்களிடையே பிறக்கும் குழந்தைகள் பார்வையற்றவர்களாகவும், அங்கவீனமாகவும் பிறக்கின்றனர். அணுக் கதிர்வீச்சுக் காரணமாக இக்குறைபாடுகள் காணப்படுகின்றன.

இவை அனைத்திற்கும் காரணம் சமாதானம் இல்லாமையே ஆகும். இவ்வாறான அழிவுகளைக் கண்ணுற்ற அன்றைய நாடுகளின் தலைவர்கள் ஐக்கிய நாடுகள் சபை என்னும் அமைப்பை உருவாக்கினர். ஆயினும் யுத்த பீதிகள், சண்டைகள், அழிவுகள் இன்னும் முற்றாகத் தீர்ந்ததாகக் காணப்படவில்லை. அவ்வப்போது யுத்தங்களும் பயங்கரவாதத் தாக்குதல்களும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அதிலும் இரசாயன ஆயுதப்பிரயோகம் அணு ஆயுதப் பலப்பரீட்சைகள் காரணமாக ஏற்படும் அழிவுகள் ஒரு புறமிருக்க மறுபுறத்தில் இயற்கைக்கு விரோதமான செயற்பாடுகள் தொழிற்சாலைக்கழிவுகள், அணுக்கழிவுகள், அணுக்கசிவுகள் காரணமாக சூழல் மாசடைதல், பூமிவெப்பமடைதல்போன்ற அனர்த்தங்கள் மனித சமுதாயத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. உலகின் மொத்த சமுதாயமுமே அழிவின் விளிம்பில் நிற்கின்றது. இவை அனைத்தையும் நீக்கக்கூடிய ஒரே மருந்து அன்பும் சமாதானமுமே எனில் மிகையாகாது.

அன்பெனும் அத்திவாரத்தின் மீது சமாதானம் எனும் கட்டிடம் அமைக்கப்படுமேயானால் எப்போதும் எந்தவொரு அழிவோ, தீங்கோ, துன்பமோ நிகழாது. எனவே இந்த சர்வதேச சமாதான வாரகாலத்தில் அனைவரும் அன்புடனும், சமாதானத்துடனும் வாழ்ந்து எதிர்கால சந்ததியினருக்கு பூரணத்துவம் நிறைந்த இவ் உலகினை கையளிப்போம் என உறுதிகொள்வோமாக!

"சர்வ ஜன காசுஹினோபவந்து" "இன்பமே சூழ்களல்லோரும் வாழ்க" எனவாழ்த்தி ஆசிகூறி அமைகிறோம்.

**சிவஸ்ரீ க. கிருபானந்தக்குருக்கள்**
தலைவர், அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை
சர்வமத சம்மேளனம், யாழ் மாவட்டம்.

# சமாதானம்

*உலக சமாதான தின சமாதானச் செய்தி*

உலக சமாதான தினமானது யாழப்பாணத்தில் கொண்டாடப் படுவதையிட்டு சந்தோசம் அடைகின்றோம். 30வருட யுத்தமானது முடிவடைந்த பின்னர் இன்று இலங்கையில் நாம் சந்தோசமாக, சமாதானமாக வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். ஆனாலும் சிங்களவர், தமிழர், முஸ்லீம் என்ற இனத்தவர்களிடையே பிரச்சினைகள் இருந்துகொண்டேதான் இருக்கின்றன. ஆனாலும் உலக சமாதான தினத்தில் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து புரிந்துணர்வுடன் நல்ல மனிர்களாக ஒருவரோடு ஒருவர் முரண்படாது இலங்கைப் பிரைஜை என்ற ரீதியில் தமிழர் முஸ்லீம் சிங்களவர்கள் ஆகிய நாங்கள் ஒரு நாட்டு மக்கள் என்பதை உணர்ந்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னேற்றுவோம்.

"தெருவன் சரனாய்"

**வண. கலைமாணி மீகஹஜந்துரே சிறிவிமல தேர**
சிறீ நாககோவில் விஹாரை
சர்வதேச பௌத்த நிலையம்

# சமாதானம்

செப்டம்பர் 21ம் திகதி சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு எனது ஆசிச் செய்தியை கூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகத்தில் மனிதர்களுக்கு வழிகாட்டுவதால் மதங்கள் அனைத்தும் சமாதானத்தை வலியுறுத்துவதாகவே இருக்கின்றது. இந்த வகையில் இந்நூல் இஸ்லாம் ஐக்கியம் சமாதானம் சகோதரத்துவம் அனைத்தையும் வலியுறுத்துகின்றது. இஸ்லாம் என்ற நாமமே சாந்தி சமாதானம் என்ற பொருளாகும்.

இஸ்லாம் ஐக்கிய பாதையில் சமாதானத்தை வழிநடத்த முயல்கின்றது. அற்ப விடயங்களிலும் ஐக்கியத்தை அவசியப்படுத்தும் இஸ்லாம் மதமானது தர்க்கிப்பது முதல் போர் புரிவதுவரை எதனையும் கூறவில்லை. சமாதான வாழ்வே மனித சுவாசத்திற்கு சிறந்தது எனக் கூறுகின்றது. பிளவு ஏற்படுவதை அது விரும்பாது. ஒற்றுமையை அது வலியுறுத்துகின்றது. போர் புரியும் சந்தர்ப்பமும் சூழலும் ஏற்படுகின்றபொழுதுகூட சமாதானமே அவ்விடத்தில் மேலானது என இஸ்லாம் கூறுகின்றது. இஸ்லாம் சமாதானத்தை வலியுறுத்தும் பாங்கு மிக முக்கியமானது ஒரு சகோதரன் மற்றொரு சகோதரனை சந்தித்தால் முகமன் கூறாது இஸ்லாம் கற்றுத்தந்துள்ள அரபு வார்த்தையின் தமிழாக்கம் "உங்கள் மீது சமாதானம் உண்டாகுவதாக" என்று கூறுவதுகூட சமாதான வாழ்விற்கு அது வழங்கியுள்ள முக்கியத்துவத்தினை காட்டகின்றது.

ஒவ்வொரு மனிதனும் அடுத்த மனிதன் சமாதானமாக நிம்மதியாக வாழவேண்டும் என்பதையே விரும்பவேண்டும். அதுவே உண்மை இஸ்லாமின் பண்பும் என வலியுறுத்துகின்றது.

எனவே சமாதானத்திற்காக சர்வதேச தினமான இன்று மனிதர்கள் தங்களது சமாதான வாழ்விற்கு தேவையான பண்புகளை வளர்த்துக்கொள்ள உறுதி கொள்ளவேண்டும். சமாதானம் என்பது

வெளியிலிருந்துவரும் ஒரு சரக்குப் பொருளல்ல. அது நம்முடைய மனதினால் உருவாகி வெளியில் நமது நடத்தையில் பிரதிபலிக்க வேண்டும். எனவே நம் உள்ளத்தில், குடும்பத்தில், சமூகத்தில் நாட்டில், உலகத்தில் சமாதான வாழ்வு வாழ வாழ்த்திப் பிராத்திக்கின்றேன்.

**அஷ்ஷெய்க் ஏ. எஸ். சுப்யான்**
நிறைவேற்றுக் குழு உறுப்பினர்
அகில இலங்கை ஜம்மியதுல் உலமா
(இஸ்லாம் மார்க் அறிஞர்கள் சபை)

நட - - - அதிர்வின்றி
பேசு - - - பணிவாக
உண்ணு - - - அளவாக
சுவாசி - - - ஆழமாக
தூங்கு - - - அமைதியாக
உடுத்து - - - அழகாக
செயல்படு - - - அச்சமின்றி
உழை - - - உண்மையாக
சிந்தி - - - சுயமாக
நம்பு - - - சரியாக
பழகு - - - நாகரிகமாக
திட்டமிடு - - - முன்னதாக
ஈட்டு - - - நேர்மையாக
சேமி - - - சிறிதாவது
செலவிடு - - - யோசித்து
நேசி - - - பேதம் கடந்து
படி - - - முடிவின்றி
மரணி - - - பயமின்றி.

# எமது நிறுவனம் பற்றிய ஒரு பார்வை

2004ம் ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டுப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதனால் உடல், உள, பொருளாதார ரீதியில் மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருந்தனர். இதனால் பல முரண்பாடுகளும் வன்முறைகளும் தலைதூக்கி நின்றவேளையில் அமைதி இழந்த சூழலில் வாழும் மக்களுக்கு ஆறுதலளிக்கும் நோக்குடன் யாழ் மண்ணில் சமாதான நல்லிணக்க பணியகமானது அமலமரித் தியாகிகள் சபையைச் சபையினரால் 2005 ஆம் அண்டு மே மாதம் 2ம் திகதி அருட்தந்தை பேணாட் அ.ம.தி அவர்களை இயக்குநராக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. எமது நிறுவனத்தின் நோக்கமானது "எமது நாட்டில் வன்செயலற்றதும், நீதியானதுமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதும், சுயமானதும் முரண்பாடற்றதுமான உளமாற்றம் வழியாக சமாதானம் நல்லிணக்கம்கொண்ட முழுமையான உறவுகளை மீண்டும் கட்டியெழுப்புவதாகும்" தூரநோக்கு "தனிப்பட்டவர்களுக்கு கல்வியறிவளித்து, நிறுவனங்களிற்கும் இயங்காற்றல் கொடுத்து, இருவருக்கும் உறுதுணையாக நின்று, வன்செயல்களை களைந்து, சமாதான வழி நின்று நமது சூழலிலும் நாட்டிலும் உலகிலும் நல்லிணக்கமான பாதுகாப்பான சூழக்களை அமைக்க வழிகாட்டல்" என்பதாகும். இந்த நோக்கத்தினை அடைவதற்காக இவரது சேவையானது மக்களுக்கு 2007 ஆண்டு மே மாதம்வரை பல்வேறு வகையில் மேற்கொள்ளப்பட்டது. சிறிய மாணவர்களுக்கு சமாதானக்கல்வி, அதிபர் ஆசிரியர் இளைஞர்களுக்கு வன்முறையற்ற தொடர்பாடல் ஆவணப்படுத்தல் என்ற வகையில் அவரது சேவைகள் தொடர்ந்தது.

2007ம் ஆண்டு வைகாசி மாதம் தொடக்கம் 2013ம் ஆண்டு ஆடி மாதம் வரை அருட்தந்தை பிரவீன் மகேசன் அ.ம.தி அவர்கள் எமது விருதுவாக்கான "வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி" என்ற விருதுவாக்கிற்கு அமைய அவரது சேவைகள் சர்வதேச நாடுகள் வரை எமது பணியகத்தின் சமாதான நல்லிணக்க செயற்பாடுகளை அறிந்துகொள்ளுமளவிற்கு பரந்து விரிந்து மக்களுக்கு சேவைகள் புரியக்கூடியதாக இவரது பணி அமைந்தது. குறிப்பாகச் சொல்லும்போது பணியக செயற்பாடுகளை மேலும் விஸ்தரிப்புச்செய்து அனைத்து மட்டங்களிலும் சமாதான நல்லிணக்க செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்ற முனைப்புடன் சேவை

செய்ததன் காரணமாக வவுனியா, மன்னார், மாவட்டங்களில் எமது கிளை நிறுவனங்கள் உருவாகுவதற்கும் வழிவகுத்தது.

2013 யூலை மாதம் தொடக்கம் இன்று வரை அருட்தந்தை கமலானந்தன் அமதி பொறுப்பெடுத்து நீதியையும் நல்லிணக்கத்தையும் உருவாக்குவதற்கு தனது பணியை தொடர்ந்து மக்களுக்காக ஆற்றி வருகின்றார்.

எமது நிறுவனத்தின் செயற்பாடுகள்

- ☐ சமாதானக்கல்வி
- ☐ வன்முறையற்ற தொடர்பாடல்
- ☐ ஆவணப்படுத்தல்
- ☐ பெண்கள் குழு
- ☐ ஏனைய நிறுவனங்களுடனான வலைப்பின்னல்
- ☐ பயிற்சி வகுப்புக்கள் வழங்குதல்

சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் அடிமட்டத்திலிருந்து உருவாக்கவேண்டும் என்ற முனைப்புடன் மக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு கருத்தமர்வுகள், போட்டிகள் மற்றும் சிறிய அளவிலான வாழ்வாதார செயற்றிட்டங்கள் மற்றும் கல்வி வசதிகளை மேம்படுத்தல் என்ற வகையில் எமது செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் சிறுவர் தினம், சமாதான தினம், ஆசிரியர் தினம், பெண்கள் தினம், இளைஞர் தினம், அன்னையர் தினம், மனித உரிமைகள் தினம் போன்ற முக்கிய தினங்களையும், பொங்கல், நவராத்திரி, ஒளிவிழா, போன்ற கொண்டாட்டங்களின் ஊடாகவும் சமாதான நல்லிணக்க செயற்பாடுகளின் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்தி வருகின்றோம்.

எமது பணியகத்தில் இயக்குனருடன், இணைந்து 30 பேர் வரையிலான பணியாளர்கள் பணிபுரிகின்றோம்.

எம் பணியகத்தின் முக்கிய தினமாக சர்வதேச சமாதான தினம் சிறப்பிக்கப்படுவதால் தனது பணிகளை எந்த வித சோர்வுமின்றி ஆற்றிவரும் எமது நிறுவனம் உங்கள் ஒவ்வொருவரையும் எம்முடன் இணைத்து சிந்தித்து சமாதானத்தை நோக்கி செயற்படுமாறு அழைப்பு விடுகின்றது.

சி. சோபனா
சமாதானக்கல்வி இணைப்பாளர்

# சமாதானத்தின் முக்கியத்துவம்

சம காலத்தில் சமாதானம் என்ற பதம் பலராலும் பல மட்டத்திலும் சர்வதேசத்திலும் பேசப்பட்டுவருகின்றது. சமாதானம் எனறால் என்ன? என்பதற்கு அறுதியான ஒரு வரைவிலக்கணத்தை யாரும் கூறாவிட்டாலும் பலர் பல கோணங்களில் பல்வேறு வரைவிலக்கணங்களை கூறியுள்ளனர்.

**பெற்றிக்கோ மேயர்** என்பவர் கூறுகையில் சமாதானம் வாழ்வின் எந்நிலையிலும் சாத்தியமாகக் கூடியதே எனகிறார்.

எமது நாடு பல்வேறு வரலாற்றுப் பெருமைகளைக் கொண்டதாகும். ஆசிய யோதியான புத்த பெருமானின் காலடிபட்ட பாக்கியமும் இலங்கைக்கு உண்டு. அதே சமயம் பல்வேறு மதங்களையும் எமது நாடு போற்றிப்பாதுகாத்து வந்துள்ளது. இந்த மதத்தை எடுத்து நோக்கினால் கண்ணகி வழிபாடு பரவிய நாடு இலங்கையாகும்.

கண்டி வரலாற்றுப் புகழ்மிக்க எசல பெரரா இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட வரலாற்றையும்கொண்ட பெருமைக்குரியதாகும். சோழ மன்னர்கள் இலங்கையை ஆண்டபோது அவர்களுக்கு எதிராகப் போராடி நாட்டை மீட்ட பெருமையையும் இந்த நாட்டுக்கு உண்டு. இலங்கை வளம் மிகுந்த நாடென்பதில் சந்தேகமில்லை. அதனாலேயே வெளிநாட்டவர் இங்கு வந்து நமது நாட்டைக் கைப்பற்றினர்.

இலங்கையை அவர்கள் ஆட்சி செய்தது மட்டுமன்றி தேயிலை, இறப்பர், கோப்பி போன்ற பயிர்களையும் பயிரிட்டனர். நீண்ட காலமாக விவசாய நாடாக திகழ்ந்த எமது நாட்டில் பெருந்தோட்டத்துறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக அக்காலத்தில் வேறு நாடுகளில் இருந்து உணவுத் தேவைக்கான பொருட்களை இறக்குமதி செய்யும் நிலைமையும் ஏற்பட்டது. எமது தாய் நாட்டின் பெருமையை உலகறிய திடசங்கற்பம் பூணவேண்டும்.

கடந்த யுத்தத்தினால் ஐக்கியம் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது மக்கள் மத்தியிலும் நல்லுறவு வலுப்பெற்று வருகின்றது. யுத்தம் ஓய்ந்த பின்னர் மீண்டும் புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது. இந்த ஒற்றுமையினை தொடர்ந்து பாதுகாப்பது தமிழ், சிங்கள மொழிகளைப் பேசும் சகலரதும் கடமையாகும். அப்போதுதான் நாம் உண்மையான சுதந்திரத்தையும் சமாதானத்தையும் அனுபவிக்க முடியும்.

உலக சமாதானத்தை வளமுறச்செய்வது இன்றைய குறிக்கோள். இதை அடைய நாம் நமது வாழ்வை அர்ப்பணிப்போம். ஒவ்வொருவருக்குமிடையே உள்ள அன்பை, கூட்டுறவை பலப்படுத்த முயலுவோம். உட்பாதகங்களை ஏற்படுத்தும் நிலை அழிந்தால் இலங்கை உலகையும் சமாதானத்தையும் நோக்கி செல்வதிலிருந்து யாரும் தடுக்க முடியாது. அதுமட்டுமல்ல உண்மையான சமாதானத்தின் அவசியம் உணரப்பட்டால்தான் சமாதானம் நிலைக்க முடியும். சமாதானம் ஒரு பண்பு. அது ஒரு மார்க்கம் அது ஒரு சாதனை - அடையவேண்டிய ஒரு இலட்சியம்.

நாம் சிறியவர்களாயினும் சரி பெரியவர்களாயினும் சரி மனித சமுதாயத்தின் எதிர்காலத்தைப்பற்றி மிக முக்கியமான நன்மைகள் பெறவேண்டுமானால் நல்ல வழிகளையே நாம் பின்பற்ற வேண்டும். நன்மைகள் தீயசெயல்கள் மூலம் விளையமாட்டாது.

தி. ஜோண்குயின்ரஸ்
தீவக வலயக்கல்விப் பணிப்பாளர்
தீவக வலயம் வேலணை

►► ◄◄

**ஆத்ம மொழி**

நான் என் இதயத்தையும் ஆன்மாவையும் நேசிக்கின்றேன்.
நான் மனித குலத்தை நேசிக்கின்றேன்.
இதயத்தையும் ஆன்மாவையும் ஒன்றாக இணைக்கின்றேன்
அன்பு அமைதி நல்லிணக்கம்

# மகிழ்ச்சிக்கான வாசல் கதவுகள்

மனிதர்கள் எல்லோரும் மகிழ்ச்சியான வாழ்க்கையைத்தான் தங்கள் வாழ்நாள் முழுவதும் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் எந்த மனிதனுக்கும் வாழ்க்கையின் அத்தனை கணங்களும் முற்று முழுதாக மகிழ்ச்சியாக இருந்தது கிடையாது. மனிதர்கள் பலரின் வாழ்க்கையில் இன்பம், துன்பம் இரண்டையும் ஒரு தராசில் இட்டால் துன்பப்பக்கம் தாளாத மனிதர்களைக் காணவே முடியாது. எனினும் எங்கள் வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் விடயங்களை துன்பங்களாகவும், இன்பங்களாகவும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் மனிதர்களுக்கு மனிதர்கள் வேறுபடுகின்றது. சிலர் துன்பமாக நோக்கும் விடயங்களைச் சிலர் இன்பமாக எடுத்துக்கொள்ளும் மனப்பக்குவத்தை உடையவர்களாக இருக்கின்றார்கள். இன்பமாக எடுத்துக்கொள்ள வேண்டிய பல விடயங்களையே துன்பங்களாக நினைத்து எதிர்கொள்ளும் பல மனிதர்களையும் நாம் காண்கின்றோம். உதாரணமாக வெளியூரில் இருந்து ஒரு உறவினர் எங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்து சில நாள்கள் தங்க நேரிடும்போது சிலர் அதை மகிழ்வாக எடுத்து கொண்டாடி மகிழ்வார்கள். சிலர் அதைச் சுமையாக எண்ணி எப்போது அவர்கள் மீளத்திரும்பவார்கள் என நாட்களை எண்ணுவார்கள். மனிதமனம் விந்தையானது.

உளவியல் அறிஞர்கள் தங்கள் ஆய்வுகளின் முடிவாக ஒன்றை கண்டறிந்துள்ளார்கள். எங்கள் வாழ்க்கையில் பத்து வீதமான நிகழ்வுகள் எமது கட்டுப்பாட்டை மீறி நிகழ்வன. உதாரணமாக நமது பிறப்பு, இனம், மொழி, அங்கவீனக் குறைபாடுகள் போன்றவை. இவற்றை நாம் தீர்மானிக்க முடியாது. மிகுதி தொன்னூறு வீதமும் அந்த பத்து வீதத்துக்கு நாம் எவ்வாறு பிரதிபலிப்புக்களை காட்டுகின்றோம் என்பதில்தான் தங்கியிருக்கின்றது. நாம் நமது பிரதிபலிப்புக்களை மகிழ்ச்சியான விதத்தில் காண்பிப்போமாக இருந்தால் வாழ்க்கை மகிழ்ச்சியாகின்றது. பிரதிபலிப்புக்களை எதிர்மறையாக காண்பித்தால் வாழ்க்கை நரகமாகின்றது. இந்த சின்ன மையத்தில்தான் வாழ்க்கையின் அச்சு சுழல்கின்றது. இதை நம்மில் பலர் உணரத் தவறுகின்றோம்.


அன்னைதிரேசா தனது ஆதரவற்ற குழந்தைகளுக்காக ஒரு செல்வந்தரிடம் கையேந்தி நின்றார். அவர் பணச்செருக்கினால் அன்னையின் கரங்களில் காறி உமிழ்ந்தார். அப்போது மிகவும் அமைதியாக அன்னை ஐயா தாங்கள் தந்த எச்சிலை நான் வைத்துக்கொள்கின்றேன். எனது பிள்ளைகளுக்காக ஏதேனும் தாருங்கள் என்றாராம். அன்னையின் பிரதிபலிப்பால் மிகவும் குறுகிப்போன அந்த செல்வந்தர் தனது சொத்துக்களில் பெரும் பகுதியை அன்னையிடம் ஆதரவற்ற பிள்ளைகளுக்காக கையளித்தாராம். இவ்வாறுதான் நமது பிரதிபலிப்புக்கள் நம்மை மட்டுமன்றி நம்மைச் சூழவுள்ளவர்களையும் தொற்றிக்கொண்டு பயன்விளைவிக்கின்றன. பிரதிபலிப்புக்களை இன்பமாகத் தரவல்ல மனிதர்களைச் சூழ்ந்திருப்பதற்கே பலர் ஆசைப்படுவார்கள். ஏன் நாம் அத்தகைய மனிதர்களாக இருக்கக்கூடாது என்று நாம் சிந்தித்ததுண்டா?

நம்மில் பலர் நமது உரிமைகள் தொடர்பில் நாளாந்தம் கவலை கொள்கின்றோம். ஆனால் எங்களுள் பலர் தங்கள் கடமைகள்பற்றி கருத்தில் எடுப்பதே கிடையாது. உங்கள் கடமைகளில் இருந்து நீங்கள் ஒதுங்கிக்கொள்வீர்களானால் **உங்கள் உரிமைகளில் இருந்து நீங்கள் ஒதுக்கப்படுவீர்கள்.** இது உலக நியதி. இந்த நியதி யாருக்கும் விதிவிலக்காக அமைந்துவிடுவது கிடையாது. அதுமட்டுமன்றி எங்கள் வாழ்க்கையின் மகிழ்ச்சியின் அளவும் இந்த நியதிக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவத்தில் தான் தங்கியிருக்கின்றது. குடும்பம் என்று வருகின்றபோது ஒருவன் கணவனாக தனது மனைவிக்கு தான் புரியவேண்டிய கடமைகளிலும், தந்தையாக இருந்து தனது பிள்ளைகளுக்கு தான் புரியவேண்டிய கடமைகளிலும் கவனமற்று இருப்பானாகில் அவனுக்கு ஒரு கணவனுக்கோ அல்லது தந்தைக்கோ கிடைக்க வேண்டிய உரிமைகளை அந்தக் குடும்பத்தில் கிடைக்காது. அவனது வாழ்க்கையின் மகிழ்ச்சியை அவனே தொலைத்தவனாகின்றான்.

இது போன்றே வேலை செய்யும் இடத்திலும் நமது கடமைகளை நாம் புறக்கணிக்கின்றபோது எமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்வதிலும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். அது எமக்கான மகிழ்ச்சியான வேலைச்சூழலை ஒருபோதும் உருவாக்கித் தரமாட்டாது. அது மட்டுமன்றி மகிழ்சியற்ற மனதோடு நாம் பணிபுரிவது

மற்றையவர்களுக்கும் மகிழ்ச்சியைத் தரப்போவது கிடையாது. எனவே நமது வாழ்க்கையின் மகிழ்ச்சியை மட்டுமன்றி நம்மைச் சூழவுள்ள சூழலையும் மகிழ்சியாக வைத்துக்கொள்ளும் ஆற்றல் நமது பிரதிபலிப்புக்களுக்கு உண்டு. நாம் சாதாரணமானவர்கள் கிடையாது. நமது நேர்த்தன்மையான எண்ணங்கள் ஆயிரம் நன்மைகளை எமக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் விளைவிக்கக்கூடியது. இந்த தன்மையை உணர்ந்து எமது பிரதிபலிப்புக்களை மகிழ்ச்சிக்கான வாசல் கதவுகளாக திறந்துவைப்போம்.

**R.SHARVESWARA** B.Sc(Hons)
Assistant Registrar,
Faculty of Medicine,
University of Jaffna.




தன்னைத்தானே திருத்திக் கொள்பவன் தான்
உலகிலேயே மிகச் சிறந்த சீர்திருத்தவாதி
பெர்னார்ட் ஷா

# கவிதைக்களம்

## வாழ்வியலில் சமாதானம் எங்கே?

சமாதானமே நீ எங்கே
சமாதானமே நீ எங்கே - உனை
தேடுகிற எம் கண்கள் இங்கே
நேற்று எம் வாசல் வரை வந்தாய்
வளம் தந்தாய் - இன்று
உன் பாதைகளை மூடி விட்டு
நீ எங்கே பயணம் போய் விட்டாய்.
சமாதானமே நீ வேண்டும்
சாமாதானமே நீ எங்கே - உனை
தேடுகின்றன எம் கண்கள் இங்கே
மனங்களில் நீ வேண்டும்
இனங்களில் நீ வேண்டும்
யுத்தம் கொன்றொளித்த பிணங்களின் - கனவும் இதுவே
பணமது அரசாளும் உலகில்
சமாதானமே நீ எங்கே? உனைத்
தேடுகின்றன எம் கண்களிங்கே.
பொருளாதாரம் வளர்ச்சியடைந்திட சமாதானம் வளர்க
வேலைவாய்ப்பில்லாத பிரச்சினை நீங்க
சமாதானம் வளர்க
உறவுகளைத் தேட சமாதானம் வளர்க
பொருட்களின் விலை குறைந்திட சமாதானம் வளர்க
மக்கள் பொருட்களை வாங்க சமாதானம் வளர்க
நாங்கள் அனைவரும் கல்வியைக் கற்க சமாதானம் வளர்க
நிம்மதியாய் உணவுகளை உட்கொள்ள சமாதானம் வளர்க
நிம்மதியாய் உறங்கிட சமாதானம் வளர்க
எங்கும் எல்லோர் மனங்களிலும் சமாதானம் மலர்க

க. சோபிகா
யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை

## வன்முறையற்ற தொடர்பாடல்...

வன்முறை தான் வாழ்வென்று
பாரில் பலர் நினைப்பதால்
பண்பும், அன்பும் இன்று
பரிகாசத்திற்கு உள்ளாகிவிட்டது.

மடந்தைகளும் வெகுளித்தனங்களும் தான்
விந்தை மனிதர்களின்
வாழ்வியல் விழுமியங்களா?
ஏனிந்த வாழ்க்கை

மாண்புமிகு மனிதர்களே நீங்கள்
உணர்வுகளுக்கு சுதந்திரம் கொடுப்பதற்காய்
உதட்டை மட்டும் அசைக்காதீர்கள்
உள்ளத்தையும் துறவுங்கள்.

**செல்வி.மேரி டோறின்ரா கிளமன்ற்**
யா / கொழும்புத்துறை இந்து மகாவிததியாலயம்

▶▶ ◀◀

## எமது தாய் தெய்வம்

உலகம் என்ற ஒன்றை
என் அன்னை முகத்தில் கண்டேன்
உறக்கம் என்ற வார்த்தையை
உன் மடியில் கண்டேன் தாயே!

போலிகள் என்பதே இல்லை
உந்தன் அன்பில்
அழியா புகழ் படைத்த என் அன்னையே
நான் உன்னை என்றும் போற்றுவேன்.

சி.தனுசியா
யா/பாசையூர் சென் அன்ரனீஸ் றோ.க. மகளிர் வித்தியாலயம்
ஈச்சமோட்டை யாழ்ப்பாணம்

# உலகோடு உன் பயணம்...

பயணம் - இது
இதயங்கள் எப்போதும் ஆசிப்பது ஆனால்
உள்ளார்ந்த பயணம்...
உலகம் இது
உன் பங்கிற்காய்
என் பங்கிற்காய்
உரிமையோடு எப்போதும். காத்திருப்பது
நீரும் நிலமும் உள்ளவரை இங்கே
நீயும் நானும் பயணிகள்
பயணம் செய்வோம் வா...

படகிங்கே ஆயத்தம்
பாதையை நாம் தான் அமைக்கணும்
அங்கே தெரிகிறது
அகல விரிந்த கடலொன்று
பயணம் செய்வோம் வா...
பட்ட காயங்கள் ஆறிவிட... அகப்
பயணம் செய்வோம்

ஏறெடுத்து பார்
எண்ணற்ற அலைகள் பல
எதிர்த்திடும் தடைகள் தாண்டிப் பயணிப்பதை
கடந்து கடந்து செல்வதாலே - அது
கடல் ஆகிறது.

அருட்பணி
அ.றொபின் கொன்பியூசியஸ்

# திறன்களே உலகின் திறவு கோல்கள்

அறிமுகம்:

"ஓடி விளையாடு பாப்பா – நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா ஓடிவிளையாடு பாப்பா... எனவும்

காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா"

எனவும் குழந்தைகளுக்காக பாப்பா பாட்டுப் பாடிய பாரதியாரை இந்த இடத்திலே எண்ணிப் பார்க்கிறேன். ஒரு குழந்தையினுடைய வளர்ச்சிக்காக அவர் வகுத்துக் கொடுத்த விதிகளையும் நேர அட்டவணைகளையும் காணும்போது அதில் பொதிந்து கிடக்கும் உளவியல் உண்மைத் தன்மைகளை ஆழமாக உணர்ந்து கொள்ளமுடிகிறது.

எமது சமூகத்தில் வாழும் சிறுவர்களுக்கு இவ்வாறான விதிப்படி வாழவழி கிடைக்கின்றதா என ஆய்வு செய்ய விழையும்போது ஏமாற்றமான பதிலே கிடைக்கின்றது. இன்றைய உலகத்தின் போக்கு நின்று நிதானித்து சரியாக அனுமானித்துச் செல்ல முடியாத நிலையில் நாளுக்கு நாள் புதிய ரூபங்களைக் கொள்ளும் மாற்றுருத் தன்மை கொண்டதாகவே காணப்படுகின்றது. இயந்திர மயமாக மாறிவரும் வாழ்க்கை புதிய நுட்பங்களின் புகுத்தலினால் புனிதத்தை தொலைத்து வரும் பண்பாட்டு கலாச்சார வாழ்வியல் மரபுகள் என எமது நாளாந்த பொழுதுகள் நாம் எண்ணித் தீர்மானிக்க முடியாத திசை நோக்கிய பயணமாகவே அமைகின்றது.

உலக மயமாக்கலின் விளைவுகள் இன்று எமது உலை வரை வந்து தொலைத்துவிட்டது. தகவல் தொழில்நுட்பத்துறையின் முன்னேற்றம் உலகத்தை உள்ளங்கையில் கிரமமாகச் சுருக்கித் தந்திருக்கின்றது. இவை அனைத்தினதும் அடிப்படையில் வாழ்க்கை இலகுவாக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் வாழுதல் என்பது கடினமாக்கப் பட்டிருக்கிறது. இதுவே உண்மை. இந்த யதார்த்தத்தை புரியாமலேயே எமது நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய இடர்மிகு

வாழ்வை இன்பமயமானதாக்கவும் வாழுதலில் ஓர் அர்த்தத்தை உருவாக்கவும் நாம் நமது சிறார்களை தயார்ப்படுத்திக் கொள்வதோடு அவர்களுக்கு அதற்கான பாதைகளையும் திறந்து விட வேண்டியிருக்கிறது.

## அறிவு சார் பொருளாதார கட்டமைப்பு

- Knowledge based Economy

போட்டித் தன்மை மிக்க உலகில் எமது நிலைத்திருப்பை நிலையானதாகவும் நீடித்ததாகவும் மாற்றிக் கொள்வதிலே இன்று போட்டி நிலவுகின்றது. அதற்காக தம்மை தயார்ப்படுத்திக்கொள்ள விழைவோரும் அதன் விளைவான சவால்களை எதிர்கொள்ளத் துணிவோரும் அதற்காக கையில் ஏந்தியிருக்கும் ஆயுதமே அறிவு.

ஏனெனில் காலத்திற்குக் காலம் உலகின் பொருளாதாரத்தைத் தாங்கும் நிலைகளாக கைத்தொழில் மயமாக்கல், விவசாயப் பொருளாதாரப் பசுமைப்புரட்சி என்று மாற்றம் பெற்று இன்று அறிவுசார் பொருளாதாரக் கட்டமைப்பிலே நாம் வந்து நிற்கிறோம். தற்போதைய உலகின் பொருளாதார சமமின்மையையும் தளம்பலையும் நிவர்த்தி செய்யவல்ல உத்தியாகவும் வழியாகவும் அறிவே (knowledge) திகழ்கின்றது.

இருந்தும் இத்தகைய அறிவு என்பது எப்படி பயனுறுதி மிக்கதாகவும் அறிவின் விளைவுகள் எவ்வாறு வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்கதாகவும் உள்ளனவோ அதனடிப்படையிலே தான் அறிவும் ஆளும் காரணியாக திகழ முடியும். எனவே அறிவை வளமாக்க அதனை மேலும் பெறுமதித்தன்மை மிக்கதாக்க திறன்கள் (Skills) அதனோடு இணைய வேண்டியது மிக மிக அவசியமானது.

## திறன்களின் அவசியம்

- Important of Skills

இவ்விடயத்தை இலகுவாக விளங்க வைப்பதாக இருந்தால் கீழ்வரும் உதாரணத்தை கூறுவது பொருத்தமானதாக இருக்கும். அதாவது

**நீச்சல் போட்டி எழுத்துப் பரீட்சையிலே ஒருவர் முதலிடம் பெறும்போது தான் நீச்சல் துறையில் முழுமையான அறிவு பெற்று விட்டதாக கருதுவது**

நீந்துவது எப்படி என்று புத்தகத்தை வாசித்து அறிந்துகொள்ளும் ஒருவரால் ஒருபோதும் ஒழுங்காக நீந்த முடியாது. புத்தகத்தை வாசித்துவிட்டு தண்ணீரிலே குதித்தால் அவரது முழு வாழ்வுமே காலியாகி விடும். நீந்துவது தொடர்பாக முழுமையான அறிவு அவரிடம் இருந்தாலும் அது தொடர்பான திறன் அவரிடம் இல்லாதபோது அது தொடர்பில் எந்தவிதமான பிரயோசனமும் கிடையாது. தண்ணீரிலே மெதுவாக இறங்கி கைகளையும் கால்களையும் அடித்து நீந்தக் கற்றுக்கொள்ளும் ஒருவரினாலேயே நீந்த முடிகிறது. அவர் தண்ணீருக்குள் இறங்கியதன் விளைவாகவே நீந்த முடிவதுடன் நீச்சல் தொடர்பான அறிவினையும் பெறமுடிகிறது.

இந்த உதாரணத்தின் மூலமாக திறன்களின் அவசியம் குறித்து இலகுவாகப் புரிந்துகொள்ள முடிந்திருக்கும்.

## தேவைப்படும் அவசிய திறன்கள்

- Essential Skills

மனிதர்க்குத் தேவையான திறன்களைப் பட்டியலிட விழையும்போது அது பல பக்கங்களாக நீண்டு செல்லும். ஒவ்வொரு மனிதரிடமும் ஒவ்வொருவிதமான திறன்கள் பொதிந்து கிடக்கின்றன. பலரது திறன்கள் அவர்களுக்கே தெரியாமல் ஒழிந்திருக்கின்றன.

நாம் இவ்விடத்தில் இன்றைய போட்டித் தன்மையான உலகையும் வேலைவாய்ப்புச் சந்தையையும் எதிர்கொள்ள எமது மாணவர்களிடத்தே வேண்டப்படும் திறன்கள் சிலவற்றை கவனிப்போம்.

1) தொடர்பாடல் திறன்
2) முகாமைத்துவ திறன்
3) தலைமைத்துவ திறன்
4) ஆளுமைத் திறன்
5) தகவல் தொழில்நுட்ப திறன்
6) சவாலை எதிர்கொள்ளும் திறன்
7) இடரினைத் தாங்கும் திறன்

8) சமயோசித தந்திரோபாய திட்டமிடல் திறன்
9) முரண்பாட்டு முகாமைத்துவத் திறன்
10) புதிது புனையும் திறன்
11) நகைச்சுவைத் திறன்
12) ஆராயும் திறன்
13) செவிமடுக்கும் திறன்
14) தீர்மானம் எடுக்கும் திறன்
15) அமுலாக்கும் திறன்
16) சமூகமயமாகும் திறன்

மேற்குறித்த திறன்கள் உள்ள ஒரு மாணவனாலேயே இன்றைய உலகை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும்.

## தொடர்பாடல் திறன்

தொடர்பாடல் திறன் எனும்போது அதனுள் பல விடயங்கள் உள்ளடக்கப்படினும் பிரதானமாக மொழியினை லாவகமாக கையாளுதலே முதன்மை பெறும். தாய்மொழி தவிர்ந்த ஏனைய மொழிகளில் உள்ள தேர்ச்சி ஒரு மனிதனை இன்னொரு மனிதனுக்கு சமனாக்கின்றது. எத்தனை மொழிகளை நாம் பேசும் திறன் மிக்கவர்களாக இருக்கின்றோமோ நாம் அத்தனை மனிதர்களுக்கு சமமானவர்கள். மொழிப்புலமை எனும்போது குறிப்பாக ஆங்கில மொழிப்புலமை முக்கியமானதாக கருதப்படுகின்றபோதும் இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்கள மொழியையும் பொருத்தப்பாட்டுடன் கையாளக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி அண்மைக்காலமாக வன்முறையற்ற தொடர்பாடல் என்ற விடயம் பற்றி பேசப்படுவதையும் தாங்கள் அறிவீர்கள். மற்றவர்களின் மனங்களை காயப்படுத்தாமல் எங்கள் உணர்வுகளை பரிமாறத் தெரிந்துகொள்ளலே வன்முறையற்ற தொடர்பாடல் என்ற அடிப்படையாயினும் இவ்விடயம் அதிகம் ஆழமானதும் அறியப்படவேண்டியதுமாகும். நேரச் சுருக்கம் கருதி அது தொடர்பில் இவ்விடத்தில் அதிகம் குறிப்பிடமுடியவில்லை.

## இடரினைத் தாங்கும் திறன்

எம்மில் பலர் எமது பொறுப்புக்களின் வழிவரும் சவால்களைச் சந்திக்க திராணியற்று பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டி வருகின்றோம். இந்தத் தயக்கம் வாழ்வில் நாம் அடையவேண்டிய உன்னதங்களையும் உயர்ச்சிகளையும் வீணாக விழுங்கிவிடுகின்றது. எவனொருவன் சவால்களை சந்திக்க துணிகின்றானோ அவனால் மட்டுமே சோதனைகளைத் தாண்டி சாதனைகளைப் படைக்கமுடியும். உலகில் பெரும் சாதனைகளை நிகழ்த்திய மனிதர்களுள் பலர் தங்கள் முயற்சிகளின்போது பல்வேறு இடர்களைச் சந்தித்து நிமிர்ந்தவர்களே. வலி தாங்கும் கற்களினால் மட்டும் தான் வணங்கத்துக்குரிய சிலைகளாக முடிகின்றது. மாறாக வலியை தாங்க மறுத்த கற்கள் வாசல் படிக்கற்களாக இருந்து மற்றவர் கால்களில் மிதிபடுகின்றது.

அது போன்றே எந்தவொரு விடயத்தையும் தன்னம்பிக்கையோடு பொறுப்பேற்று நடாத்தும் தற்துணிவும் ஒரு மனிதனுக்கு அவசியமானது. அந்தத் தற்துணிவுடன் இணைந்ததாக தலைமைத்துவ, முகாமைத்துவ ஆளுமைத்திறன்கள் இருப்பதுடன் பொறுப்பேற்றலின் விளைவாக விழையும் சவால்களுக்கு முகம்கொடுத்தல், இடரினைத் தாங்குதல் என்பனவற்றுடன் நோக்கினை இலகுவாகச் சென்றடைய தந்திரோபாய திட்டமிடல் திறனையும் ஒரு மனிதன் வளர்த்துக் கொள்ளவேண்டியது அவசியமானதாகும். இதனை எமது மாணவர்களும் பெற்றோர்களும் புரிந்துகொள்வது எதிர்காலத்தை எழில் மிக்கதாக மாற்றும்.

## முரண்பாட்டு முகாமைத்துவத் திறன்

இன்று எங்கும் மலிந்து கிடக்கும் விடயமாக முரண்பாடுகளே உள்ளன. வீட்டில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் முரண்பாடு, பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையில் முரண்பாடு, பாடசாலையில் ஆசிரியருக்கும் அதிபருக்கும் முரண்பாடு, ஆசிரியர்களிடையே முரண்பாடு, மேலதிகாரிக்கும் அவருக்கு கீழே வேலை செய்பவர்களுக்கும் முரண்பாடு என எங்கும் முரண்பாடு மலிந்து கிடக்கின்றது. இவ் முரண்பாடுகள் சரியான முறையில் முகாமை செய்யப்படாவிடில் அவற்றின் விளைவுகள் ஒரு நிறுவனத்தின் அது (குடும்பமாகவோ பாடசாலையாகவோ அலுவலகமாகவோ இருக்கலாம்) செயற்பாட்டுத்திறனையும், அமைதியையும் சீர்குலைத்து விடுகின்றன.

முரண்பாடுகளை முகாமை செய்வது என்பது தனித்துவமான திறன். முரண்பாடுகளை ஆரோக்கியமான விதத்தில் மாற்றிக்கொள்ளலும் தீமை பயக்கத்தக்க முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டுவரலும் அவசியமானது. அதற்கான திறன்களை மாணவர்கள் தங்கள் பாடசாலை வாழ்க்கையிலிருந்தே அனுபவங்கள் வாயிலாக பெற்றுவளர்தலே எதிர்காலத்தில் அவர்களின் தொழில் வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையும். முரண்பாடுகளை முகாமை செய்துகொள்வதற்கும் நாம் வாழும், பணிபுரியும் சூழலை மகிழ்ச்சிகரமாக்கிக் கொள்ளவும் நகைச்சுவைத்திறன் அவசியமானது. ஆனால் எமது நகைச்சுவைத்திறன் மற்றவர்களின் மனங்களை புண்படுத்தி விடாத அளவுக்கு பார்த்துக்கொள்ள வேண்டும்.

அனைவருக்கும் குறிப்பாக தலைமைத்துவப் பொறுப்புக்களில் இருக்கின்றவர்களுக்கு இருக்கவேண்டிய மிக முக்கியமான திறன் செவிமடுக்கும் திறன். நம்மில் பலர் மற்றவர்களின் கருத்துக்களுக்கு காது கொடுக்க தயாராக இல்லை. மற்றவர்களின் கருத்துக்களும் பெறுமதியானது என உணர்கின்ற ஒரு மனிதனால்தான் தனது கருத்துக்களை தெளிவாக முன்வைக்க முடியும். தலைமைத்துவத்தில் இருக்கின்றவர்களுக்கு பெரிய காதுகளும் சிறிய வாயும் இருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. இது செவிமடுக்கும் திறனின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. செவிமடுக்கும் திறன் என்பதிலிருந்து கிரகித்தல் திறன் என்பது வேறானது என்பதையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

திறன்களில் அதி முக்கியமானது அமுலாக்கும் திறன். இந்த திறன் இலகுவில் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. பலர் நல்ல சிந்தனைக் காவிகளாக இருக்கின்றார்கள். பலரை இருத்தி வைத்து கேட்டால் இந்த உலகத்தை மாற்ற வல்ல பல கருத்துக்கள் குறித்து மணிக்கணக்கில் பேசவல்லவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் அவர்களது சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் ஆற்றல் அவர்களிடம் வறுமையாகவே உள்ளது. செயல்வடிவம் பெறாத எந்த நல்ல சிந்தனையும் சிறுதுளியும் பயனற்றது. எனவே எமது சிந்தனைகளை அமுலாக்கும் திறன்களை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். ஒரு விடயத்தை அமுலாக்க விளையும்போது நாம் சவால்களை சந்திக்கவும்

# சர்வதேச சமாதானதின
# சிறப்பு நிகழ்வுகள்



















# சர்வதேச சமாதானதின
# 2013


சமாதானக்கல்வி செயற்பாடு
யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்..


பாடசாலை அதிபர்களுக்கான விழிப்புணர்வு
-செயலமர்வு-தென்மராட்சி வலயம்.


சமாதானக்கல்வி செயற்பாடு
யா/அனலைதீவு சதாசிவம் மகா வித்..


சமாதானக்கல்வி செயற்பாடு
யா/புங்குடுதீவு மகா வித்..


சமாதானக்கல்வி செ
யா/நயினாதீவு மக


முன்பள்ளி ஆசிரியர்களுக்க
-செயலமர்வு-வே


மாணவத் தலைவர்களுக்கா
-செயலமர்வு-யாழ் வ


இளைஞர் ஒன்றுகூடல் நிகழ்

# னதின சிறப்பு நிகழ்வுகள் 2013



க்கல்வி செயற்பாடு
ாதீவு மகா வித்..



ரியாகளுக்கான விழிப்புணர்வு
லமர்வு~வேலணை



வர்கஞக்கான விழிப்புணர்வு
ர்வு~யாழ் வலயம்



டல் நிகழ்வு~கிளிநொச்சி



கிராமமட்ட இளைஞர்களுக்கிடையிலான
உதைபந்தாட்ட போட்டி



மாணவத் தலைவர்களுக்கான விழிப்புணர்வு
~செயலமர்வு




மாணவத் தலைவர்களுக்கான விழிப்புணர்வு
~செயலமர்வு



பாடசாரை மாணவர்களுக்கான விழிப்புணர்வு
~செயலமர்வு










தீர்மானங்களை எடுக்கவும் மற்றவர்களை வழிநடத்தவும் முரண்பாடுகளை முகாமை செய்யவும் வல்லவர்களாக இருக்கவேண்டியது அவசியமானது.

## திறன்களை வளர்த்துக் கொள்வது எவ்வாறு?

திறன்கள் என்பன ஒரு மனிதனிடத்தில் இயல்பாகவே ஏற்படுகின்ற விடயங்கள் எனினும் நாம் எமது முயற்சியினால் அவற்றினை வளர்த்துக் கொள்ளமுடியம். தனியே புத்தகப் படிப்பும் பரீட்சைப் பெறுபேறுகளின் விளைவுகளுமே எமது வாழ்வைத் தீர்மானிக்கும் என்ற மனப்பக்குவம் முதலிலே மாறவேண்டும். இதனை எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே எமது முன்னோர்கள் ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது என இயம்பியிருந்தார்கள்.

எனவே நாம் பாடத்திட்டங்களை பாடமாக்கிக் கொள்வதாலோ அதனை நன்றாக விளங்கி பரீட்சைகளிலே நல்ல மதிப்பெண்களை பெறுவது மட்டுமே எமது வெற்றியை தீர்மானித்து விடப்போவதில்லை. நாம் கற்றல் செயற்பாடுகளுடன் சமாந்தரமாக கல்விசாரா இணைப்பாட விதானச் செயற்பாடுகளையும் முன்னிறுத்திச் செல்லும்போதே திறன்களையும் பொருத்தமான அறிவினையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

ஒரு வகுப்பறை கற்றுக்கொடுக்க முடியாத விடயங்களை விளையாட்டு மைதானங்களும் திறந்த வெளிகளும் நண்பர்கள் வட்டமும் சிறந்த சமூகத்தொடர்பும் எமக்கு கற்றுக் கொடுக்கின்றன.

நாம் வகுப்பறைகளை விட்டு வெளியே வரும்போது வானம் எமக்காக திறந்திருக்கும். இந்த இடத்தில் வகுப்பறைகளை விட்டு வெளியே வருதல் என்பதை சிலர் வகுப்பறைகளை புறக்கணித்தல் அல்லது கைவிடல் என தவறாக அர்த்தம் கொள்ளக்கூடாது.

வகுப்பறைகளை தாண்டி வெளியே உங்களுக்காக காத்திருக்கும் விளையாட்டு வாய்ப்புக்கள், கழகங்கள், சங்கங்களின் செயற்பாடுகளில் பங்கேற்று தலைமை தாங்க கிடைக்கும் சந்தர்ப்பங்கள் நாடகம், இசை, கவிதை, பேச்சு, கட்டுரை, சிறுகதை பொதுஅறிவுப்

Nallur Swami Gnanapragasar Library
"Thedurpatham"
657/1, Hospital Road, Jaffna.

போட்டி எனப் பங்கேற்கக் கிடைக்கும் வாய்ப்புக்கள் என்பனவற்றை தவறாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்லாது நாம் இன்னொரு மிக முக்கியமான விடயத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும். மனிதன் ஒரு சமூக விலங்கு அவன் சமூகத்தோடு இணைந்தே வாழவேண்டியுள்ளது. சமூகத்தை சாராது எந்த மனிதனும் வாழுதல் என்பது கடினமானதே. இதனை உணர்ந்து நாம் எமது சமூக மயமாகும் திறனை நிச்சயமாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உலக மயமாக்கலின் பல விளைவுகள் இன்று பலரது சமூக மயமாகும் திறன்களை மட்டுப்படுத்தியும், கட்டுப்படுத்தியும் அவர்களை தனிமைப்படுத்திவிட்டன. இந்த நெருக்கடியை எமது சமூகம் குறிப்பாக வளரும் மாணவர்கள் எதிர்கொள்ளவேகூடாது. இந்த மிகப் பெரிய சவாலைத் தாண்டி எமது பிள்ளைகள் சமூக மயமாகும் தன்மையை அதிகரித்துக்கொள்ள பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை தனியார் கல்வி நிலைய சூழல் என அனைத்துமே வாசல்களை திறந்து வழிகளைக் காட்டவேண்டும். இன்று பல பெறுமதிமிக்க தனியார்துறை வேலைவாய்ப்புக்களுக்காக (வங்கிகள்) முதலில் திறன்களை மதிப்பிடும் நேர்முகத் தேர்வுகள் நடாத்தப்பட்டு தெரிவுசெய்யப்படும் சிலருக்கு மட்டுமே அறிவை மதிப்பீடும் பரீட்சைகள் நடாத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்படுகின்றன. மாணவர்களே இவ்வாறு அறிவைத் திறன் மிஞ்சும் சந்தர்ப்பங்களை எதிர்காலத்தில் நீங்கள் பல தடவைகள் சந்திக்கநேரிடும். அதற்காக இன்றே தயாராகுங்கள்.

**முடிவு**

ஆழமாக ஆராயப்படவேண்டிய இவ்விடயம் தொடர்பாக சிறியளவில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தத்தக்க விதத்திலேயே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவர்கள் திறன்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அறிவோடு சமாந்தரமாக திறன்களையும் வளர்க்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். உலகளாவிய ரீதியில் சிந்திப்போம் ஆனால் உள்ளூர் அளவிலே செயலாற்றுவோம் (Think Globally but Act Locally) என அனைவரும் இது விடயம் தொடர்பில்

திடசங்கற்பம் பூண்டு சவால்மிக்க உலகை வெற்றிகொண்டு சாதனைகளைப் படைக்க எமது மாணவர்களைத் தயார்ப்படுத்துவோம்.

மாணவர்களே பலவகைகளிலும் சவால் மிக்கதாக அமையவுள்ள எமது இனத்தின் எதிர்கால வாழ்வு மாணவர்களாகிய உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. வெறுமனே புத்தகப்படிப்பை மட்டும் மையப்படுத்தி வளராது ஆற்றலும் திறனும் உள்ளவர்களாக நீங்கள் நிமிரும்போது உலகம் உங்கள் காலடிகளில் பணிந்து நிற்கும். நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு வெற்றிகளும் எங்கள் எல்லோரினதும் பலமான நலமான எதிர்காலத்துக்கு உறுதுணையாக அமையும் என்பதை மறந்து விடாதீர்கள்.

**இ. சர்வேஸ்வரா** B.Sc (Hons) Spl in Sc & Edu
உதவிப் பதிவாளர்
மருத்துவபீடம் - யாழ்.பல்கலைக்கழகம்
தொடர்புகளுக்கு: மின்னஞ்சல் r.sarveswara@gmail.com
தொலைபேசி 0778449739



# முரண்பாட்டை முகாமை செய்தல்

**அறிமுகம்**

மனதில் ஏற்படக்கூடிய ஒரு நிலையே முரண்பாடாகும். பொதுவாக நிறுவனங்களில் தனிநபர்கள், குழுக்கள், பிரிவுகள், துறைகள் போன்றன தங்களின் சொந்த நலனை மனிதில் கொண்டே முடிவுகளை எடுக்கத் தூண்டுகின்றன எனலாம். இதனாலேயே நிறுவனங்களில் முரண்பாடு தோன்றுகின்றன. முரண்பாடானது ஏதேனும் வடிவில் அல்லது அளவில் மனித வாழ்க்கையின் அங்கமாகிவிட்டது எனலாம்.

**முரண்பாடு**

முரண்பாடானது குழுக்களுக்கு அல்லது தனிநபர்பகளுக்கு இடையிலான உடன்பாடின்மையைக் குறைக்கின்றது. முரண்பாடினது முகாமைத்துவத்தில் பின்வருவன பயன்படுத்தப்படுகின்றது.

1. முன்னோடி நிலைகள்
2. ஈடுபட்டுள்ள தனிநபர்களின் ஆற்றல்மிக்க நிலைகள்.
3. தனிநபர்களின் அனுபவ அறிவு நிலைகள்.
4. மாற்றிக்கொள்ளப்பட்ட போக்கு.

முரண்பாடானது எங்கும் அம்சமாக உள்ளது. மக்களின் இலக்குகள் மாறுபட்டு அமைவதால் கட்டுப்பாடு கடினமாக உள்ளது. எனவே முரண்பாடும் தவிர்க்க இயலாததாக உள்ளது. முரண்பாட்டின் பல்வேறு நிலைகள். முரண்பாடானது பல்வேறு நிலைகளில் ஏற்படுகின்றன. அவையாவன:

அ. குழுக்களுக்கு இடையிலான முரண்பாடுகள்.
ஆ. தனிநபர்களுக்குள் ஏற்படும் முரண்பாடுகள்.
இ. தனிநபர்களுக்கு இடையிலான முரண்பாடுகள்.
ஈ. நிறுவனம் சார்ந்த முரண்பாடுகள்.

**முரண்பாட்டு நடைமுறை**

முரண்பாடானது கீழ்வரும் 05 கட்டங்களை உள்ளடக்கி உள்ளன. அவையாவன:

அ. வாய்ப்பு வளமிக்க எதிர்ப்பு / ஒவ்வாமை
ஆ. அறியும் ஆற்றல் மற்றும் உருவாக்கும் தன்மை
இ. உள்நோக்கங்கள்
ஈ. போக்கு
உ. வெளியிடுகைகள்

**முரண்பாட்டை நிர்வகிப்பதற்கான நுட்பங்கள்**

அதிகார அணுகு முறையாலும் முறைமை அணுகு முறையாலும் பேரம் பேசுவதன் மூலமும் முரண்பாடுகள் தீர்க்கப்படலாம். பேரம் பேசுதல் என்பது கிடைக்கக்கூடிய வள ஆதாரங்களை அதிகரித்தல் அல்லது முரண்பாட்டுடன் தொடர்புடைய நபர்களின் தேவைகளைக் குறைத்தலோடு தொடர்புடையதாக உள்ளது.

**முரண்பாட்டுத் தீர்வு நுட்பங்கள்.**

முரண்பாட்டுத் தீர்வு நுட்பங்களில் கீழ்வருவனவும் அடங்குகின்றன.

- அ. பிரச்சினைளைத் தீர்த்தல்.
- ஆ. கீழ்ப்பணியாளர்களின் இலக்குகளை நிர்ணயித்தல்.
- இ. வள ஆதாரங்களின் விரிவாக்கம்
- ஈ. தவிர்ப்பு
- உ. சமூகமாக்குதல்
- ஊ. இணக்கம்
- எ. அதிகாரம் சார்ந்த ஆணை
- ஏ. மனிதக் காரணிகளை மாற்றுதல்
- ஐ. வடிவமைப்புக் காரணிகளை மாற்றுதல்.

**முடிவுரை**

முரண்பாடுள்ள நபர்கள் மனம்விட்டுப் பேசி கலந்துரையாடி பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்க்கவேண்டும். முரண்பாடுள்ள நபர்களிடம் இலக்குகளை அடைய அவர்களின் ஒத்துழைப்பு வேண்டும் என வலியுறுத்தவேண்டும். அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லை எனில் எந்த இலக்கும் அடையப்பட முடியாது. எனவே முரண்பாட்டை முகாமைசெய்வதனூடாக இரண்டு நபர்களுமே வெற்றி. வெற்றி தீர்வைபெற முகாமைத்துவமானது வழிவகை செய்யவேண்டும்.

**கலாநிதி. பா. நிமலதாசன்**
சிரேஷ்டவிரிவுரையாளர், முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# சமூகத்தின் சாயலாக இன்றைய இளைஞர் சமுதாயம் மாறவேண்டும்

சமூகத்தின் மலரும் மொட்டுக்களாக இன்றைய இளைஞர்கள் மாறவேண்டும். ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் தனக்கென தனித்துவமான நல்ல எண்ணங்கள், பழக்க வழக்கங்கள், சமூகத்திற்கு தியாகத்தோடு சேவையாற்ற கூடியவர்களாக மாறும் காலத்திலே நல்லொழுக்கம், சமூகப்பற்று, உறவுகளை உற்றுப்பார்க்கின்ற, நாட்டை நேசிக்கின்ற, மக்களை நேசிக்கின்றவாகளாக ஒவ்வொரு இளைஞர்களும் யுவதிகளும் மாற்றங்களுக்கு உள்ளாகும் தன்மை உருவாகும்.

கடவுள் எமக்களித்த பருவ காலங்களை நாம் சிறந்த முறையிலும் ஆளுமை மிக்க நல்ல மனிதர்களாக உலக வாழ்வை மகிழ்ச்சியோடு உள்ளாந்தமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மை எமக்கும் எம்மவர்க்கும் நல்ல வழிகாட்டியாக அமையும் என்பதே நோக்கத்தக்க விடயமாகும்.

சமூகமானது ஒவ்வொரு இளைஞனையும் யுவதியையும் நாட்டின் தூண்களாக ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாகவும், எதிர்கால வாழ்விற்கு வழியமைப்பவர்களாகவும், நெறிபிறழ்வான நடத்தைகளளை விட்டெறிந்து போதைப்பொருள், இளவயது திருமணங்கள், துஷ்பிரயோகங்கள், வீண் செயற்பாடுகளை தவிர்த்து பெற்றோருக்கும் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் உங்கள் ஒவ்வொருவரினதும் அடி நாதங்களாய் சமூகம் பார்க்கப்படவேண்டும். இரவும் பகலும் மாறி மாறி வரும். அது இயற்கையின் நியதி ஆனால் இழந்துவிட்ட இழமைக்காலங்களை மீட்டிட முடியாது. அதற்கேற்ப இளைமையில் சருகாகிப்போகும் உறவுகளாய் அல்லாது வாழ்விற்கு அர்த்தத்தினைக் காணும் ஆக்கத்திறன் மிக்கவர்களாய் உருவாகவேண்டும். எனவே உங்களின் இளைமைக் காலங்களை நீங்கள் ஒவ்வொருவரும் வரையறைசெய்து வாழப்பழகிக் கொள்ளவேண்டும். தற்கால சூழ்நிலையானது சில நல்ல சந்தர்ப்பங்களையும் சில கெட்ட சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்த வாய்ப்புண்டு. உங்கள் தெரிவே உங்களுக்கு உகந்ததாய் அமைய வழியமைத்துக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்விற்கு யார் பொறுப்பென்று

இளையோர் யுவதிகளாகிய நீங்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியவர்களாய் மாறவேண்டும். எனவே உங்கள் இளைமைப் பருவமானது உணர்ச்சி மிக்க பருவ காலங்களாகும். அதன் விளைவுகள் பல செயல்கள் எத்தகைய விளைவைத்தரும் என்பதை சிந்தித்து செயலாற்ற வேண்டும். பெரியோரின் அறிவுரைகளை பின்பற்றி உங்களது நலனுக்காகவே என்பதை ஏற்றுக்கொண்டு சமுதாயத்திற்கு நல்ல இளைஞர் யுவதிகளாக ஒளிதரும் திரிகளாய் சமூகத்தின் முத்துக்களாய் வாழ வழியமைத்துக் கொள்வது உங்கள் வாழ்வை வழிப்படுத்திக் கொள்ளும் என்பதே நோக்கமாகும்.

ஓ இளைஞா நீ இறந்தபோதும் - உன்னை உறவில் நினைத்திடும் இளைஞர் யுவதியாக உன்னை உருவாக்கிக்கொள்..

திருமதி
சசிக்குமார் சுஜாதா
நிர்வாக உத்தியோகஸ்தர்

***யாருக்காகவும் உன்னை மாற்றி***
***-கொள்ளாதே.***
***ஒருவேளை மாற நினைத்தால்,***
***ஒவ்வொரு மனிதர்களுக்கும்***
***நீ மாற வேண்டி வரும்.***

***- கவியரசு கண்ணதாசன்.***

# சமாதானம் - உளவியல் பார்வை

"சமாதானம்" என்பது அற்புதமான ஒரு சொற்பதம். நான் என்னுடன் எந்தவிதக் கருத்து முரண்பாடும் கொள்ளாது இணங்கி வாழ்தல். என்னை எனக்கு மிகமிகப் பிடித்தமான நிலை. பிறரை அவரது பலம் பலவீனங்களோடு அப்படியே ஏற்றுக்கொள்கின்ற பண்பு. மற்றோரிடம் இருக்கின்ற ஒட்டுமொத்தக் குணங்களில் நல்லவற்றையே தெரிவுசெய்து பாராட்டும் பண்பு. பிறர் இடர்படுகின்றபோது அவர் விரும்பிக்கேட்கும் பட்சத்தில் இயலுமான அளவில் உதவுகின்ற பண்பு. எமது வார்த்தையோ, செயல்களோ பிறரைக் காயப்படுத்தாமல் இயலுமானவரை தொடர்பாடும் பாங்கு. மனசறிந்து ஒருவருக்குத் துன்பம் செய்யாதிருக்கும் தன்மை. இவை குடியிருக்கும் இதயத்தில் ஒருபோதுமே அமைதி குலையாது. எவனொருவன் தன்னோடுதான் முரண்படாதிருக்கிறானோ அவன் நிச்சயமாகப் பிறரோடும் முரண்படமாட்டான். ஆம் இந்தநிலை இலகுவில் வந்துவிடுமா? நாம் என்ன புத்தரா? இயேசுவா? சாதாரண மனிதனப்பா! என்று முணுமுணுக்க வேண்டாம். ஏன் தெரியுமா? நாம் ஒவ்வொருவருமே அமைதியை விரும்பும் வாழ்வுந்தல் கொண்ட மனித ஜீவன்கள் தான்.

இனிய குடும்ப அங்கத்தவர்கள் மத்தியில் நிறைந்த அன்பு காட்டி அரவணைக்கப்படும் பிள்ளை பிறரைத் துன்புறுத்தி இன்பம் காணும் குரூர ரசனையுள்ளவனாக இருக்கமாட்டான். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தள்ளப்படும் துர்ப்பாக்கிய நிலை சில வேளைகளில் ஒருவரை குரூரமானவராக மாற்றிவிடுவதும் உண்டு. ஆனால் பிறப்பு எப்பொழுதுமே சிறப்பானதுதான்.

எம்மிடம் எத்தனையோ குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் அவற்றை இனம் கண்டு அவற்றை நிறைவானவையாக மாற்றிக்கொள்ளும் பட்சத்தில் அவை எம்மையும் உயர்த்தி நம்மைச் சேர்ந்தவர்களையும் உயர்த்தி விடமுடியும். எம்மிடம் இல்லாத ஆனால் பிறரிடம் காணப்படுகின்ற சில நற்பண்புகளால் அவர்கள் பாராட்டுப்பெறும் வேளையில் எம்மனதில் தோன்றும் ஆற்றாமை, வெறுப்பு, பொறாமை என்பன எம்மிடம் இருக்கின்ற நற்பண்புகளைக்கூட மாற்றியமைத்துவிடும். எமக்குச் சரி என்று படுகின்ற சில விடயங்கள் பிறருக்குப் பிழையாகத்

தோன்றும் பட்சத்தில் எழுகின்ற முரண் மிகவும் ஆபத்தான நிலைக்கு உறவையே விரிவுபடுத்திவிடும். நாம் பிறரின் கருத்துகள் அனைத்தையும் செவிமடுக்க வேண்டுமென்று எவ்விதக் கட்டாயமும் கிடையாது. அதேபோல் எமது கருத்துக்களை மற்றவரிகளிடம் திணிக்க முயலுவதும், அவர்கள் செவிமடுக்காதபோது உறவில் முறுகலை ஏற்படுத்துவதும் ஆரோக்கியமற்ற ஒருநிலை என்பதையும் நாம் விளங்கிக்கொள்வது அவசியம்.

இருகருத்துக்களின் ஒவ்வாத மாறுபட்ட தன்மை முரண்ணாகி எமது உளச்சம நிலையைக் குழப்பி ஒரு பெரும் மோதுகையாக உருவெடுக்கும்போது நாம் எமக்குள்ளே சமாதானத்தை இழந்து போகின்றநிலை தோன்றும். எமக்குப் புறத்தே முரண்கள் தோன்றி நாம் அமைதி இழப்பதைவிட எமக்குள்ளேயே நாம் முரண்களை வளர்த்துக்கொள்ளாத ஒரு இணக்கப்பட்டினை கொண்டிருந்தால் எம்மளவில் நாம் அமைதியான மனநிலையைப் பெறமுடியும். அனைத்து மனங்களும் இப்படி அமைதி கண்டு விட்டால் அப்புறமென்ன? நாம் மானிடராகிடலாம் தானே!

- திருமதி பகீரதி கணேசதுரை



உன் மீது
உனக்கே
நம்பிக்கை
இல்லை
என்றால்.
கடவுளே நேரில்
வந்தாலும்
பயனில்லை...
--விவேகானந்தர்

# சமாதானத்திற்கான கல்வி

எந்தவொரு தத்துவத்தையும் கல்வியினூடாக மாத்திரமே செயல்முறையில் அமுல்படுத்த முடியும். கல்வியின் முக்கிய நோக்கம் மாண்புடைப் பிரஜையைத் தோற்றுவித்தலாகும். இன்றைய உலகம் இக்கணணி யுகத்தில் தொடர்பாடலை மேன்மையுற செய்து சமாதான செயல்முறையை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்த முனைகிறது. எனினும் சமாதானம் என்பது நடைமுறையில் தோற்றுப்போன ஒன்றாகவே இருக்கின்றது. இவ் அமையம் "சமாதானத்திற்கான கல்வி" என்ற விடயம் பிரதான ஆணிவேராக, பலம் வாய்ந்த அத்திவாரமாக எடுத்துச்செல்லல் அத்தியாவசியமாகிறது.

சமாதானம் என்பது ஒவ்வொரு தனியாளிடம் இருந்தும் மனப்பாடாக, உணர்வுபூர்வமாக ஏனையோரிடம் தொடர்புற வேண்டியதொன்றாகும். தனியாள், குடும்பம், சமூகம், நாடு, உலகம் என பரந்துசெல்ல வேண்டியதும், அவசியமானதும் என்றால் மிகையில்லை. இதுவே நிரந்தர, உலக சமாதானத்தை ஏற்படுத்தும்.

நாம் கடந்துவந்த பாதையில் நடந்து முடிந்த உலகமகா யுத்தங்கள், வியட்னாம் போர் போன்றவற்றுடன், குறிப்பாக எமது இலங்கையில் ஓய்ந்துவிட்ட போராட்டம் என நாட்டிடை, நாட்டுள் எத்தனை பிணக்குகள். இவை சமாதானத்தின் சிதைத்த சின்னங்கள், வடுக்களாக எம் கண்முன் நிற்கின்றன. சமாதானம் சீர்குலைந்தால் பயங்கரவாதம் தலைதூக்கும், மனித வளங்கள், பௌதீக வளங்கள் அழிவடையும், சுற்றாடல் மாசடையும், சமூக கலாசாரங்கள் சிதைந்து போகும்.

இவற்றை தவிர்க்க வேண்டின் நம் ஒவ்வொருவருக்கிடையே நற்புரிந்துணர்வு, தன்னடக்கம், சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஏனையோரின் கருத்துக்களை செவிமடுத்தல், தேவைகளை தெரிந்துதவுதல், கூட்டுறவு, நம் பொறுப்பு கடமைகள் தொடர்பான கவனம், சமய அறநெறிகளை மதித்தல், அவற்றை கடைப்பிடித்தல் போன்ற பண்புகளை வளர்ப்பதன் மூலம் சமாதானத்திற்கான அத்திவாரம் இடப்படவேண்டும்.

மேற்கூறிய பண்புகளை அடைவதற்கு அனைவருக்கும் "சமாதானத்திற்கான கல்வி" முறைமை ஒன்றை முன்னெடுத்துச்செல்ல வழிசமைக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. இக் கல்வி முறைசார் (பாடசாலைகள்) மூலமும், முறைசாரா (சமய நிறுவனங்கள், கலாசார நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள்...) மூலமும்

வழங்கப்படவேண்டும். முறைசார் கல்வியாகப் பாடசாலை கலைத்திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டாலும், போதிய உந்துதல்கள் இன்மையால் சமாதானக் கல்வி வளர்ச்சி அடைவதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

சமாதானத்திற்கான கல்வியானது சுயமொழி, சுற்றாடற்கல்வி, சமயம், கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, அழகியற் பாடங்களினூடாக ஒழுக்க விழுமியங்கள், சூழலை அறிதல், தொடர்புறல், பிரச்சினை தீர்த்தல், ஆய்வு முறைமைகள், மனச்சமநிலை ஏற்படல் போன்றவற்றினூடாகவும் வேண்டிய நுட்பங்களை வழங்குவதுடன், நடைமுறையில் சாத்தியப்படுத்துவதற்கும் வழிகாட்டிகளாக விளங்கவேண்டும்.

சமாதானப் படிமுறைகளாகத் தொடர்பாடல், செவிமடுத்தல், கருத்துணர்தல், பிரச்சினைகளைப் பகுத்தாய்தல், பிரச்சனைகளைத் தீர்த்தல் ஆகிய செயன்முறைக் கல்வி மூலம் சமாதானச் சிகரம் கட்டி எழுப்பப்படல் வேண்டும். முறைசாராக் கல்வி மூலம் செயற்படுத்தப்படும் கூட்டங்கள், கருத்தமர்வுகள், விழிப்புணர்வுக் கண்காட்சிகள், தெருக்கூத்துக்கள், விவாதம், பட்டிமன்றம், நாடகம், நடனம், போட்டிகள் நடாத்தல், பிரசங்கங்கள் வைத்தல், அறநெறிக் கல்வி வழங்குதல் மூலம் சமாதான வழிமுறைகள் போதிக்கப்பட வேண்டும்.

இக்கல்வியறிவானது, முன்மாதிரியாக விளங்குதல், ஆலோசனை வழங்கி வழிகாட்டியாக வருதல், நடுநிலை வகிப்பவராகுதல், சமுதாயத்துடன் நல்லுறவு கொண்டவராதல், சமூக அந்தஸ்துப் பெற்ற பெரியவராதல் ஆகிய சிறப்பம்சங்களைக்கொண்டு மிளிர்வர். அதாவது கல்வியின் உயரிய குறிக்கோளான, விவேகமுடைய, சிறந்த சமுதாயப் பயனுடைய, மனித நேயம் மிக்க நற்குடிமகனை உருவாக்கலாம். தனியாள் சிறக்க, குடும்பம் ஒன்றாக, கிராமம், நாடு, உலகம் என ஒரே குடையின் கீழ் "சமாதானம்" நிலைத்து நிற்கும்.

வளர்க்க! சமாதானக் கல்வியை! வளர்க! சமாதானம்!

சாந்தி! சாந்தி! சாந்தி!

திருமதி. லீ. அருளையா
யா / மயிலிட்டி றோ. க. த. பாடசாலை
ஆனைக்கோட்டை.

# உள்ளக முரண்பாடுகளும் இளைஞர்களும்

போரோடு போராடி இடம் பொருள், உயிர், மானம், இப்படியெல்லாம் இழந்த நிலையிலும்கூட நம் மக்கள் சளைத்தவர்களல்ல என நெஞ்சை நிமிர்த்தி நடக்க நினைத்த இவ்வேளையில் பஞ்சமா பாதங்கள் தலை விரித்துத் தாண்டவமாடி, எம்மை எதிர்கொள்ளும் திடம் உங்களிடம் இருக்கின்றதா? என்று கேள்வி கேட்பது இரவு பகலாக காதுகளில் இரைவதால் தூக்கத்தை மறந்து, இவற்றின் எதிர்மறை விளைவுகளை பற்றியும் அதனால் நாம் இயல்பான சமூக கலாசாரப் பின்னனிகளையும் கட்டமைப்பையும் இழந்து தவித்து தடுமாறி தடம்புரண்டு போவதை பத்திரிகைகள், இணையத்தளங்கள் மற்றும் ஊடகங்களில் தினமும் சுட்டிக்காட்டி எச்சரிக்கும் சமிக்ஞைகள் என்னை பேனாவை என் கையில் எடுக்கத் தூண்டியது.

**உள்ளக முரண்பாடு என்பது.**

ஒருவருடைய சிந்தனைக்கும் அவர் கற்றுக்கொண்ட விடயங்களுக்கும் இடையே ஒருமைப்பாடற்ற தன்மையினால் ஏற்படும் குழப்ப நிலையைக் குறித்து நிற்கின்றது.

எமது மக்களுக்கே உரிய பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், கலாசார விழுமியங்கள், வாழ்வியல் சார்ந்த கட்டுக்கோப்பான சமூக அமைப்புமுறை இப்படியெல்லாம் எத்தனை எத்தனையோ, விதிமுறைகளுக்குட்பட்டு வாழ்ந்த எம் வழித்தோன்றல்களா இவர்கள் என எண்ணியெண்ணி மனம் வெந்து நொந்து போகும் அளவிற்கு இவர்கள் எங்கே செல்கிறார்கள்? பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் எத்தனை வேகமாற்றம், ஊடகங்கள், சினிமா மற்றும் முறைகேடான செயல்களைத் தூண்டும் சஞ்சிகைகள், இப்படி எல்லாவற்றுடனும் வெற்றிநடை என்ற பெயரில் வெறியாட்டம் போடும் இணையத்தளங்கள் எல்லாம், விதவிதமான கைத்தொலைபேசிகள் இவற்றின் கூட்டுமுயற்சியினாலும், வெளிநாட்டு பண்பாடு, கலாசாரம் வெளிநாட்டவர்களின் வருகை போன்றவற்றின் தாக்கங்களினால் ஏற்கனவே நாம் வளர்ந்த கட்டமைப்புக்கள் பற்றிய சிந்தனைகள் குலைக்கப்பட்டு தற்போதைய நடைமுறைகளுக்கும், உண்மையான வாழ்க்கைக்கும் இடையில் முடிவெடுத்து செயற்பட இயலாதவர்களாக

தம்முள்ளேயே முரண்பட்ட நிலை தோன்றுவதனால் தமது மனப்பாங்கிற்கும் தற்போதைய திடமற்ற வாழ்க்கை நிலைக்கும் இடையில் சிக்கித் திணறித் தடம்புரழும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதனால் தமது இயல்பு நடத்தைக் கோலங்களில் பிறழ்வுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள்.

தற்போதைய போதைப் பொருட்களின் அறிமுகம், பாவனை அவற்றிற்கு அடிமையாகும் நிலை இவற்றாலும் முறை தவறிய காதல் விவகாரங்கள், பாலியல் பிறழ்வு நடத்தைகள், உடலில் பச்சைகுத்துதல், தொழிலற்றநிலை, பாலியல்கல்வி பற்றிய தெளிவின்மை, விபச்சாரத்திற்கு தூண்டப்படுதல், சிறுவர்களுக்கு எதிரான துஸ்பிரயோகங்கள், சமூகத்தில் பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றி அறியாமை ஆகிய இன்னோரன்ன பல விடயங்களால் இளைஞர்கள் யுவதிகள் நிர்பந்திக்கபப்ட்டோ அல்லது தமது விருப்பத்தின் பேரிலோ ஆட்பட்டு எமது மண்ணின் வாசனையை மறக்கும் நாடகம் அரங்கேறி சுயத்தை தவிடுபொடியாக்கி விட்டிருக்கின்றது. இவைகூட நம் சமூகத்திற்கு போரிற்கு பின்னான சமாதானம் தந்த தருகின்ற மனவடுக்கள்தான் எனப்பார்க்க வேண்டியுள்ளது.

**நாம் இப்போது விட்டுவிட்டால் இனி எப்போதும் அமைதியில்லை காத தூரத்தில் தெரிகிறது கலியுகத்தின் கறைபடிந்த சாபகேட்டிற்குள்ளான சமூகம். பின்னால் திரும்பி பார்த்தாலோ அவசரப்பட்டு மறைக்கப்படும் உறைந்து தாரான குருதிக்கறைகள் படிந்த பூமியின் பலபாகங்கள். இதில் நாம் தெளிவற்று இருந்துவிட்டால் இனியும் விடிவற்ற இரவாகவே எம் பொழுதுகள் கழியும்.** இதை யாராலும் மாற்றமுடியாது. விதிவரைந்த பாதை வழி நம் வாழ்க்கை செல்லவில்லை. நம் பாழ்பட்ட விதியை நினைத்து குரலெடுத்து அழுகின்ற என் மனம்போல் இன்னும் பலமனங்களின் அழுகை கேட்கிறதா உங்கள் செவிகளுக்கு. இது உங்களை நோக்கிய என் கேள்வி.

இப்படிப்பட்ட தளம்பல் நிலைகளினால் நம்மவரின் நடத்தைக் கோலங்கள் புள்ளியிட்டுப் போடாத சிதைந்த கோலங்களாகத்தான் இருக்கின்றன. அழகற்ற அமைப்பிற்குட்படாது, பிறர் அருவருக்கும் வகையில் இல்லாதிருக்க எல்லோரும் வாருங்கள் எம் விரல்களை

நட்புடன் ஒன்றிணைத்து இனியேனும் புள்ளியிட்ட அழகான கோலங்களை சித்தரிப்போம். இது சிந்திப்போரின் கனவு, இதை நனவாக்குவோம்.

இது என்ன நடத்தைக் கோலங்கள் என்ற கேள்வி விரிகிறதா? விடையும் எங்கள் கைவசமே இது எங்கள் கண்ணெதிரில் கண்ணாடியில் விம்பம் போல தெரிகிறதே. கொலை, களவு, காமம், குரு நிந்தனை என்று எப்போதோ எம் முன்னோர் சொல்லிதந்த சொற்கள் எல்லாம் இப்போ செயல்வடிவம் எடுத்திருக்கின்றது. அதனால் இப்போது நாம் வாழ்வா சாவா என்ற இரண்டிற்கும் நடுவில் திண்டாடுகின்றோம். இது ஒரு சங்கிலித் தொடராக விரிந்துகொண்டே செல்கிறது.





இப்படியே தொடர்ந்தால் எம் சமூகம் ஊனமுற்றவர்களைக் கொண்டதாக மாறிவிடும். ஊனம் என்ன என்று கேட்கின்றீர்களா? நான் உடல் ஊனத்தை இங்கு குறிப்பிடவில்லை. அது பிறப்பிலும் இயற்கை அனர்த்தங்கள், போர் இவற்றின் வெறும் அடையாள சின்னங்கள் மட்டுமே.

ஆனால் மனம் ஊனமானால்த்தான் மேலே குறிப்பிட்ட எல்லாம் நடக்கும். இனி நாம் வெகு விரைவில் சந்திக்க/ வரவேற்க காத்திருப்பது மனம் ஊனமானவர்கள் நிறைந்த ஒரு சமூகத்தைதான். இந்த துர்ப்பாக்கிய நிலை எம்மை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அது தன் அரக்க கைகளை நீட்டி வரவேற்ற துடிக்கும் இவ்வேளையில், பெற்றோர்களே! நீங்கள் கண்மூடித் துயிலாமல் விழிப்புடன் செயற்பட்டு உங்கள் பிள்ளைகள் எங்கு இருக்கின்றார்கள் என்று தேடுங்கள். ஆசிரியர்களே! உங்கள் கடமையில் கண்ணும் கருத்துமாக இருங்கள். குருமார்களே! நன்நெறியைப் போதியுங்கள். ஊடகவியலாளர்களே! புதிய நல்ல பல சிந்தனைகளைத் தாருங்கள். முதியோர்களே! இளையோரை இம்சை செய்யாதீர்கள். மருத்துவர்களே! கபடமான கருசசிதைவுகளை நிறுத்துங்கள். இவை எல்லாம் நான் உங்களுக்குவிடும் அன்பான கட்டளைகளும், பணிவான வேண்டுகோள்களும் மட்டுமல்ல எம் இளைய சமூகத்திற்காய் மடி ஏந்திக் கேட்கும் (பிச்சை) யாசகம் என்றே வைத்துக் கொள்ளுங்கள் நிலமையைப் புரிந்து அனைவரும் செயற்படுவோம்.

"வாழ்க வையகம் வாழ்க வளமுடன்"

**Dr.** பராசக்தி



# சமாதானம் சாத்தியமாகுமா ?

சமாதானம் என்பது நண்பர்களுடனல்ல பகைவர்களுடனே ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை வாழ்வால் வெளிப்படுத்தி வாழ்ந்து காட்டிய தலைவன் நெல்சன் மண்டேலா. சமாதானத்தின் அடையாளமாக வரலாறு படைத்துள்ளார். இதுவே எமது மண்ணில் மலரவேண்டும். இதற்கான புரிந்துணர்வு, மன்னிப்பு, மனங்களில் மலர்வது என்பது சாதாரணமான விடயம் அல்ல.

புன்னகையோடு ஆரம்பிக்கட்டும் புதிய உறவுகள் என்பது ஒரு அறிஞரின் கூற்று. எமது நாட்டில் போரினால் ஏற்பட்ட வடுக்களை ஆற்றுப்படுத்த முடியாது, தன்னைத் தானே ஏற்றுக்கொண்டு தன்னோடு சமாதானம் செய்யமுடியாது தவிக்கும் மனங்கள் அமைதி இழந்து அல்லல்படுகிறன. அவர்கள் தமது நிலை, அழகு, தொழில், உடல் அவயவங்கள் முதல், வசதி, சிந்தனை, முயற்சி, நிலைகளை திருப்தியாக ஏற்றுக்கொள்ளாதவரை தன்னுள் தனக்கு பற்றற்ற நிலையை உருவாக்கிக்கொள்வோராக மாறுகிறார்கள். இதனால் அவர்களது உள்மன வெளிப்பாடுகள், வன்முறை, வார்த்தைச் செயல்களாகி புன்னகை இழந்து தவிக்கிறது. இவர்கள் எந்த அழகு சாதனங்களாலோ, பயிற்சி நிலைகளாலோ தம்மை மாற்ற முயன்றாலும் ஆழ்மன விரக்தியின் வெளிப்பாடுகள் காரணமாக அவர்களின் அழகு வெளிப்படுத்த முடியாது போகும்.

தன்னம்பிக்கையும் தன் சிறப்பையும் ஏற்றுக்கொள்ளாத வரைக்கும், பிறரை ஏற்றுக்கொள்ள முனைதல் என்பது பொய்த்து போகின்றது. பிறர் திறமைகளை, ஆற்றல்களை, சிறப்புக்களை கண்டு பாராட்டத் தெரியாது, ஏற்றுக்கொள்ள முடியாத பல சந்தர்ப்பங்கள் பாமரரை விட படித்தவர்கள், வசதி வாய்ப்புள்ளவர்கள் இடத்தே தான் அதிகம் காணப்படுகின்றது. இதனால்தான் பகை உணர்வுகளைத் தூண்டி, பகைவரை உருவாக்கி, வார்த்தைகளாலும் செயல்களாலும் கௌரவத்தை சிதைத்து, ஒருவன் தன் அமைதியை மட்டுமல்ல, சூழலையும் வறட்சியாக்கி விடுவதால் சமாதானத்தின் அர்த்தம் உணரப்படாத பொருளாக மாறி வருகிறது. இச்சூழ்நிலையினால் மக்கள் மனங்கள் வனாந்தர பிரதேசமாக அழகிழந்து, அன்பிழந்து, அமைதியும்

சமாதானமும் அவர்கள் வாழ்க்கையில் பொருளற்று போவதை தவிர்க்க முடியாது. சிறுவர்கள் தம் சக மாணவர்களுடன் பழகும்போது ஏற்படும் கள்ளமில்லா உறவு, தாய்பிள்ளை உறவு, நல்ல நண்பர்கள் உறவு, நல்ல சூழலை மட்டுமல்ல, நல்ல சமாதான உலகை அனுபவிக்க வல்லது.

தான் வாழும் சூழலில், தொழிலகத்தில், கூடும் மையங்களில் குடும்ப உறவுகளைச் சந்திக்கும்போது எல்லா மகிழ்ச்சியும், குதுகலிப்பும் பாராட்டுக்களும் ஏற்படுத்தப்படும்போது அதிக உடலாரோக்கியத்துடன் செய்தொழில் விருத்தியும், பிறர் பங்களிப்பும் இரட்டிப்பாக காட்சி தரும். தனக்காக மட்டுமல்ல பிறரின் நலத்திற்காக தம்மால் இயன்றதை செய்யும் ஆவலும் அச்சூழலை அழகுபடுத்தும். இவை எம்தேசத்தில் மலர வைப்பதில் பலரது பங்களிப்புக்கள் முக்கியமானது. பகைவரை மன்னிப்பதும் விட்டுக்கொடுப்பதும் உணரவைப்பதும் கோழைத்தனமான செயலல்ல. பெரும் தன்மையாளரின் செயல்களே. இச்சூழலில் ஒரு பகைவர், ஒரு குதர்க்கவாதி, ஒரு சமூகவிரோதி தன் செயல்களால் பகையை வளர்க்க, சமாதான உலகை சிதைக்க முனையும்போது அச்சூழல் சமாதானச் சூழல் சிதைவடைய வாய்ப்புக்கள் உண்டு.

சமாதானம் பற்றி பேசுவோர் தம் சமாதான பணியில் உடன் உழைப்பாளிகளை ஊக்கப்படுத்தி சமூகத்தில் சிறப்புமிக்கவர்களாக அவர்களை மாற்றி, அவர்கள் திறமைகள் ஊடாக சமாதான செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது, சமூகத்தில் அவர்கள் மதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வாய்ப்க்கள் தோன்றும்.

நல்ல தலைவர்களை உருவாக்குவதும், நல்ல தலைவர்களை தெரிவுசெய்ய முன்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் சமூக சீரின்மையை களைவதில் மக்கள் பங்கேற்கின்றார்கள். சமாதானம் என்பது கடையில் விலைகொடுத்து வேண்டும் பொருளல்ல மாறாக அதனை பாதுகாத்து வளர்ப்பது ஒருவரால் இருவரால் முடியாது. பல தரப்பினரும் இதய சுத்தியுடன் இணையும்போதுதான் சமாதானத்தை உலகில் காணலாம். போரை நடத்துவது, சுலபம் பகையை வளர்ப்பது சுலபம், அதனால் பயன் பெறுவோர் சமாதானம் மலர்வதற்கு பல சூழ்ச்சி தடைகளை விதைத்தே வருகிறார்கள். சமாதானத்தை காப்பது, வளர்ப்பது என்பது போரைவிட கடினமானது. எனவே சமாதான சூழல் உருவாக தடைக்

கற்களாக இருப்பவர்களைக் கண்டு அவர்களுக்கு சமாதான முக்கியத்துவத்தை உணரவைத்து, அவர்கள் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்த முனைவோரே சிறந்த சமாதான தூதுவர்களாக மாறுகின்றார்கள்.

எனவே எம் துன்ப துயரங்களை எமக்குப் படிப்பினையாக்கி, வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டு, சமாதானத்தின் கருவிகளாக எம்மை நாம் மாற்றாதவரை சமாதானம் எம் தேசத்தில் கானல் நீராகவே தெரியும். எனவே ஒவ்வொரு மனிதனும் சுயகௌரவத்துடன் வாழும் முன்மாதிரிகையான மனிதர்களாக இருந்து, இனங்கள், மதங்களுக் கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, சமாதானக் கருவிகளாக விளங்குவதே இன்றைய சமூகத்தின் தேவையாக இருக்கின்றது.

- யோசப் பாலா

உனக்கு
மன அமைதி
வேண்டுமானால்,
யாருடைய
குறையையும்
காணாதே!
- விவேகானந்தர்.

# மன அடக்கமே மகிழ்வான வாழ்வின் அத்திவாரம்

*நேர் மனப்பாங்கை விருத்தி செய்து கொள்வோம், நம்மை நாமே செதுக்கிக் கொள்வோம்*

காலச் சுழற்சியில் பலநாட்கள் பறந்தோடுகின்றன. சில நாட்கள் எம்மை சிந்திக்க தூண்டுகின்றன. அந்த வகையில் காலக் கலண்டரின் இன்றைய நாள் உலக சமாதானம் பற்றிய சிந்தனையை எம்மில் ஏற்படுத்த உதயமாகின்றது. இன்றைய உலகமயமாக்கலின் விளைவாக மானிட வர்க்கத்தின் ஆன்மீக சிந்தனை அருகி போட்டி உலகில் பிரவேசிப்பதற்கான திறவுகோல்களை நோக்கி பயணிக்கின்றது. இதன் விளைவாக எம்மிடையே வேண்டத்தகாத சிந்தனைகள், செயல்கள், வக்கிர மனப்பாங்கு, போன்ற உள் முரண்பாட்டுக் கோலங்கள் விருத்தியடைந்து செல்வதை காணக்கூடியதாகவுள்ளது. மனிதன் முதலிலே தனக்குத் தானே முரண்பட்டு மனசமாதானம் எனும் அழகிய பொக்கிசத்தை இழந்து விடுகின்றான். தனக்குள்ளே முரண்படும் மானிட வர்க்கம் அதன் விருத்திக்ககட்டங்களாக குடும்பம், சமூகம், இனம், மதம், நாடு, உலகம் என்ற ரீதியில் முரண்பாட்டுக் கோலத்தை உருவாக்கி சமாதானம் எனும் உட்பொருளிலிருந்து விடுபட்டு அதன் எதிர்த்தன்மை கொண்ட குரோத மனப்பாங்கை விருத்தி செய்து கொள்ளும் நிலைக்கு மாறுகின்றான். இதன் விளைவாக தானும் தான் வாழும் சூழலையும் அமைதியற்ற நிலைக்கு வலிந்து அழைத்துச் செல்கின்றான்.

இந்நிலை மாற்றத்தை தவிர்ப்பதற்காக உலகில் பல சமூக அமைப்புக்களும், ஆன்மீக அறநெறி பிரிவுகளும் உருவாக்கம் பெற்று மானிட வர்க்கத்திற்கான கருத்தூட்டல்களை செய்வதற்கு தள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் காலத்தால் முந்திய எமது சமயமும் சரி ஏனைய மதங்களும் சரி, மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வையகத்திலே தத்துவக் கருத்துக்களையும் ஆன்மீக சிந்தனைகளையும் விதைத்து வருகின்றன. எனினும் பலர் இவ்விடங்களில் இருந்து கருத்துக்களை உள்வாங்காது விலகி வருகின்றனர். இது வேதனையளிக்கும் விடயமாக அமைகின்றது.

இந்து சமயத்தின் தத்துவக் கருத்துக்களிலும் புராணக் கதைகளிலும் சமய தத்துவ ஞானிகளின் வாழ்வியல் முறைகளிலும் ஒரு ஆத்மாவின் சந்தோசமான வாழ்வியல் முறை பற்றி எடுத்தியம்பப்படுகின்றது. மன அடக்கமே வாழ்வின் வெற்றியாக கருதப்படுகின்றது. அன்பினால் அடையக் கூடியவற்றை அதிகாரத்தினால் அடைய முடியாது எனக் கூறுகின்றது.

அந்த வகையில் மனிதர்கள் என்ற வகையில் மதம், மொழி, இனம் கடந்து மனிதநேய பண்புகளை மதித்து, சகிப்புத்தன்மையை வளர்த்து, சகோதரத்துவத்தை உருவாக்கி, நேர்மனப்பாங்கு கொண்ட சிந்தனையாளர்களாக எம்மை நாமே உருவாக்கி ஆன்மீக சிந்தனையில் அக்கறை செலுத்தி வாழ்வதற்காக எம்மிடையே நடத்தை மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வோம். என உலக சமாதானம் தொடர்பாக பேசப்படும் இந்நாளில் உறுதி எடுத்துக் கொள்வோமாக.

"அன்பே சிவம்"

சிவஸ்ரீ. வி. பாலகுமாரக் குருக்கள்
சாவகச்சேரி.

**பணிவில்லா பண்பு வேண்டாம்.**
**பொய்யான உள்ளம் வேண்டாம்.**
**மன்னிக்கா மனம் வேண்டாம்.**
**பகைமையான பாசம் வேண்டாம்.**
**நன்றியில்லா நட்பு வேண்டாம்.**
**உதவா உள்ளம் வேண்டாம்.**
**வறுமையான வாழ்வு வேண்டாம்.**
**அடக்கமில்லா அமைதி வேண்டாம்.**
**சமாதானமில்லா சமூகம் வேண்டாம்.**
!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!

# நெல்சன் மண்டேலா



உலகில் அதிகம் மதிக்கப்படும் தலைவர்களில் ஒருவராக விளங்குபவர் நெல்சன்மண்டேலா. தென்னாபிரிக்காவின் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப் பட்ட முதல் குடியரசுத் தலைவர். தென்னாபிரிக்க நாட்டில் கறுப்பினத் தவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தாலும் சிறுபான்மையினரான வெள்ளையர்களே அங்கு ஆட்சி அமைத்து வந்தார்கள். கறுப்பினத்தவர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியை உருவாக்கி இன வெறியை எதிர்த்துப் போராடினார். அரசாங்கத்தின் கடுமையான கெடுபிடியினால் 1961ம் ஆண்டில் மண்டேலா தலைமறைவாகி 1962ம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு 27 ஆண்டு சிறைவாசம் அனுபவித்தார். 1990ல் அவரது விடுதலைக்குப் பிறகு அமைதியான முறையில் புதிய தென்னாபிரிக்க குடியரசு மலர்ந்தது. மண்டேலா தற்போது 95 வயதை அடைந்துள்ளார். உலக சமாதானத்துக்காக மண்டேலா ஆற்றிய சேவைகளைப் பாராட்டி அவர் சிறையில் இருக்கும் போதே இந்திய அரசு "நேரு சமாதானவிருது" வழங்கியது. கணவர் சார்பில் வின்னி டெல்லிக்கு வந்து அந்த விருதைப் பெற்றார். 1990 இந்தியாவின் பாரதரத்னா விருதும் அவருக்கு வழங்கப்பட்டது. 1993 உலக அமைதிக்கான நோபல் பரிசும் இவருக்கு வழங்கப்பட்டது. அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான மகாத்மாகாந்தி சர்வதேச விருதும் நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவரது பிறந்த நாளான யூலை 18ம் தேதியை சர்வதேச நெல்சன்மண்டேலா தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

நன்றி: முரசொலி

## வங்காரி மாத்தாய்



சுற்றுச் சூழல் மற்றும் மனித உரிமைகள் விடயம் தொடர்பாகச் செயலாற்றி வந்த ஆபிரிக்கப் பெண் மணியான வங்காரி மாத்தாய்க்கு 2004ம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதல் ஆபிரிக்கப் பெண்மணி என்ற பெருமைக்குரியவர். பெண்களை ஒருங்கிணைத்து காடுகளை அழிப்பதற்கு எதிரான போராட்டத்தை அவர் முன்னெடுத்து வந்தார். அதேபோல அநீதிக்கு எதிராகவும், ஊழலுக்கு எதிராகவும் அவர் அதிகாரிகளுடன் தொடர்ந்து மோதி வந்தார். மரங்களை நடும்போது, அமைதி மற்றும் நம்பிக்கைக்கான விதைகளை நாம் நடுகின்றோம் என்று வங்காரி மாத்தாய் 2004ம் ஆண்டு நோபல் விருதைப் பெற்ற பிறகு ஆற்றிய உரையில் தெரிவித்திருந்தார். சீரழிந்துவரும் சமூக மற்றும் சுற்றுச் சூழலில் ஏழ்மையிலும் துன்பத்திலும் இருக்கும் பெண்களுக்கு மரங்கள் பெரும் உதவியாக இருக்கும் எனவும் வங்காரி மாத்தாய் அப்போது தெரிவித்தார். இதன் மூலம் அவர்களுக்கு தேவையான நீர், விறகு, மற்றும் உணவு போன்றவை போதிய அளவில் கிடைக்கும் எனவும் அவர் கூறியிருந்தார். கென்ய அரசின் காடுகளை அழிக்கும் திட்டத்திற்கு எதிராக 1977 ம் ஆண்டு கென்யாவில் கிரீன் பெல்ட் மூமேண்ட் எனப்படும் பசுமை இயக்கத்தை தொடங்கிய அவர் 47 மில்லியன் மரங்களை நட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஆளுமையுள்ளவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் புற்றுநோயின் காரணமாக மரணத்தை அணைத்துக் கொண்டார்.

நன்றி: முரசொலி

நேயர்களே!
பலரது ஆலோசனைகள்,
வழிகாட்டல்களுக்கு அமைய
இரண்டாவது மலராக வெளிவரவிருக்கும்
வானவில் சஞ்சிகை தாங்கி வருவது

**முரண்பாட்டு நிலைமாற்றம்**

Conflict Transformation

**தை – ஆனி–2014**

இந்த இதழுக்கான உங்கள் ஆக்கங்களை எழுதி 31. 03. 2014ற்கு முன்னர் எமக்கு தபால் மூலம் அல்லது மின் அஞ்சல் மூலம் அனுப்பிவைக்க முடியும்.

**தபால் முகவரி**

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்
இல. 08. குருசோ வீதி, யாழ்ப்பாணம்.

**மின் அஞ்சல் முகவரி**

cprjaffna@gmail.com
jaffnacpr@gmail.com



பாடசாலை மாணவர்களுக்கான சமாதானக்கல்வி செயற்பாடு-மல்லாகம்




வவுனியாவில் நடாத்தப்பட்ட பால்நிலை சமத்துவம் தொடர்பான செயலமர்வு




சிறுவர் சமாதானக்கல்வி-மன்னார்




மகளிர் தின சிறப்பு நிகழ்ச்சி-கரவெட்டி



வன்முறையற்ற தொடர்பாடல் பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு-மானிப்பாய்.



பெண்கள் வலுவூட்டல் நிகழ்வு-பண்டத்தரிப்பு

J.S. Pandatherippu